
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper
மின்னிதழ்
2024 ஜூலை 13 சனிக்கிழமை
# தினகரன்
THINAKARAN 92 ANNIVERSARY
வரு. 92 இல. 166 | Saturday 13, July, 2024 | 10 பக்கங்கள் | 50/-

## யுனெஸ்கோ பணிப்பாளர் நாயகம் 16ஆம் திகதி இலங்கைக்கு வருகை



ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்பின் (United Nations Educational, Scientific and Cultural Organization) (UNESCO) பணிப்பாளர் நாயகம் Audrey Azoulay இலங்கை அரசின் அழைப் பின் பேரில் எதிர் வரும் 16 முதல்

06

## புதிய சட்ட மாஅதிபர் நியமனம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் புதிய சட்ட மாஅதிபராக ஜனாதிபதி சட்டத்தரணி கே.ஏ. பாரிந்த ரணசிங்க நியமிக்கப்பட்டார். இலங்கை அரசியல மைப்பின் 61 ஈ (ஆ) சரத்துக்கமைய இந்த நியமனம் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (12) பிற்பகல் வழங்கப்பட்டது.

## 1,000 ஏக்கர் பொருளாதார வலயம் முழுமையானதும் 2,600 மில்லியன் டொலர் வருமானம் புதிதாக 75,000 வேலைவாய்ப்புகள்

### பிங்கிரிய பொருளாதார வலயத்தை 05 துறைகளின் கீழ் அபிவிருத்தி செய்யவும் திட்டம்

### நாட்டின் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில் பொருளாதாரத்தை பலப்படுத்தி புதிய முதலீடுகளை கொண்டு வருவோமென்றும் ஜனாதிபதி பிங்கிரியவில் தெரிவிப்பு



ஏற்றுமதி பொருளாதாரம், உற்பத்தி, சுற்றுலா, தொழில்நுட்பத் துறை, நவீன விவசாய முறை ஆகியவற்றின் ஊடாக நாட்டுக்குள் வலுவான பொருளாதாரத்தைக் கட்டமைக்க முடியும் என்றும், அதற்கு அவசியமான அடித்தளத்தை அரசாங்கம் இட்டுள்ளதெனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கையின் மிகப் பெரிய ஏற்றுமதி வலயமாக 1,000 ஏக்கர் பரப்பளவில் பிங்கிரிய ஏற்றுமதி வலயத்தின் இரண்டாம், மூன்றாம் கட்ட அபிவிருத்தி பணிகளை ஆரம்பித்து வைக்கும் வகையில் நேற்று (12) நடைபெற்ற நிகழ்விலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் புதிய ஏற்றுமதிப் பொருளாதாரத்தை

06

## யாழ். குடாநாட்டின் வாழ்க்கை தரத்தை உயர்த்த அரசு அர்ப்பணிப்புடன் உள்ளது

### வடக்கு விவசாயிகளுக்கும் பிரதமர் விசேட பாராட்டு



யாழ். குடாநாட்டின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளதாக குறிப்பிட்ட பிரதமர் தினேஸ் குணவர்தன, நாட்டின் உற்பத்திப் பொருளாதாரத்துக்கு வலுசேர்க்கும் வடபகுதி விவசாயிகளுக்கும் விசேட பாராட்டுகளை தெரிவித்தார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று (12) யாழ். மாவட்டச் செயலகத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் நடைபெற்றது. இதன்போது முட்டை அடை காக்கும் இயந்திரங்கள் பகிரந்தளிக்கப்பட்டதுடன், குறைந்த வருமானம் பெறுவோருக்கு அரிசியும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இங்கு கருத்து தெரிவித்த பிரதமர், யாழ். குடாநாட்டின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது. வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக உள்ளூராட்சி நிர்வாக பகுதியில் கிராமிய மற்றும் நகர அபிவிருத்திக்கான விசேட ஏற்பாடுகளை அதிகரிக்கத் தொடங்கியுள்ளோம். நீங்கள் அனைவரும் அடைந்துள்ள முன்னேற்றத்தை அவதானிக்கவும், வழங்கப்பட்ட அறிக்கைகளின்

06

## படையினருக்கு வசிப்பதற்காக வழங்கப்பட்ட

# அரச காணிகளுக்கு நிபந்தனையின்றி காணி உறுதிப்பத்திரம் வழங்கும் திட்டம்

## தெளிவுபடுத்தும் நடமாடும் சேவைகள் முன்னெடுப்பு

- 17 ஆம் திகதி சாலியபுர கஜபா படைப்பிரிவு
- 19 ஆம் திகதி குருநாகல் விஜயபா படைப்பிரிவு
- 23 ஆம் திகதி களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரி

நாட்டின் இறைமையைப் பாதுகாக்க உயிர்த்தியாகம் செய்த, யுத்த செயற்பாடுகளில் கடமையாற்றிய முப்படையினர், இலங்கைப் பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையில் ஊனமுற்ற வீரர்களுக்கும், உயிர்த்தியாகம் செய்தவர்களின் குடும்பத்தாருக்கும் வசிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள அரச காணிகளை நிபந்தனையின்றியும் கட்டணங்கள் இல்லாமலும் முழுமையான உரிமையை வழங்குவதற்கான வேலைத்திட்டம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.


நாட்டில் அச்சமின்றி மக்கள் நடமாடுவதற்காக உயிர்த் தியாகம் செய்த பாதுகாப்புத் தரப்பினருக்கு தாய்நாட்டில் காணித் துண்டு ஒன்றின் உரிமையை உறுதிப்படுத்துவதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். ஜனாதிபதி செயலகத்தின் தலைமையில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

ஜனாதிபதியினால், எண். PS/CM/APL/267/2024 மற்றும் 13052024 திகதியிடப்பட்ட, இராணுவ வீரர்களுக்கு வசிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள அரச காணிகளுக்கு முழுமையான சலுகைகளை வழங்குவதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவைப் பத்திரம் எண். அமப/24/0898/601/058 மற்றும் 05/23/2024 திகதியிட்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி, இராணுவத்தினருக்கு பின்வரும் சலுகைகள் உரிமையாகும்.

1. முறையான தெரிவு முறையின் மூலம் தகுதி பெற்ற போதிலும் இதுவரை அபிவிருத்தி செய்யத் தவறிய அனைத்து பிரிவுப் போர்

06

## ஜனாதிபதி தேர்தலிற்கு எதிராக நீதிமன்றத்தில் மற்றுமொரு மனு



அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் உரிய முறையில் நிறைவேற்றப்படாததால், அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அனுமதி பெறும் வரை ஜனாதிபதி தேர்தலை நடத்துவது அரசியலமைப்பை மீறுவதாக அமைவதான தீர்மானத்தை வழங்கக்கூறி அடிப்படை உரிமை மனுவொன்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சட்டத்தரணி அருணலக்சிறி உனவடுன என்பவரால் இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

06

### ஜனாதிபதி வேட்பாளரின் தொலைக்காட்சியை

## பாராளுமன்ற சிறப்புரிமை குழுவில் விசாரணைக்கு அழைக்க வேண்டும்

### அமைச்சர் சுசில் சபாநாயகரிடம் வேண்டுகோள்

லோரன்ஸ் செல்வநாயகம்



ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடவுள்ளாரென்பதற்காக போலியான குற்றச்சாட்டுக்களை தன் மீது சுமத்த முடியாதென தெரிவித்த அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, அந்தவேட்பாளரது தனியார் தொலைக் காட்சியை பாராளுமன்ற சிறப்புரிமை குழுவுக்கு அழைத்து விசாரணை நடத்துமாறும்

06

### வருங்கால சந்ததியை உருவாக்கும்

## ஆசிரியர்கள் மனச் சாட்சியின்படி செயற்பட வேண்டியது அவசியம்



நாட்டின் வருங்கால சந்ததியை உருவாக்கும் கௌரவமான சேவையாக ஆசிரியர்களுக்கு பாரிய பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதால், ஆசிரியர்கள் அனைவரும் அதனை சரியாக புரிந்துகொண்டு மனசாட்சிப்படி செயற்படுமாறு கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் கேட்டுக்கொண்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (12)

06

## மலேசிய பாதுகாப்பு அமைச்சருடன் செந்தில் சந்திப்பு



மலேசியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான், மலேசியாவின் பாதுகாப்பு அமைச்சர் முகமட் ஹசனை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார். இச்சந்திப்பின் போது

06



03

### புத்தளம், அநுராதபுரம் வீதியில் இரு வாகனங்கள் மோதி விபத்து

கார் முற்றாக சேதம், உயிர்ச்சேதம் இல்லை

03

### கொவிட் 19 வைரஸ் தொற்றால் உலகில் வாரம் 1,700 பேர் பலி

உலக சுகாதார அமைப்பு அறிவிப்பு



03

### விசா விநியோக விலை மனு விவகாரம்

### தடயவியல் கணக்காய்வுகளுக்கு உட்படுத்த அரச நிதிக்குழு முடிவு

### டுபாயில் கைதான பாதாள உலகக் குழுவின்

## 'பாபி', 'சமித்புர சத்து' CID யினரால் இலங்கைக்கு அழைத்து வருகை



கொலைகள், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்காக இலங்கையில் தேடப்பட்டு வந்த இரண்டு பாதாள உலகக் குழுவின் இருவர் டுபாயிலிருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இலங்கையிலிருந்து தப்பிச் சென்று டுபாயில் பதுங்கியிருந்த இலங்கையர்

06

### 'கிளப் வசந்த' வின் இறுதிக் கிரியை

## அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதையடுத்து மலர்ச்சாலை பகுதியில் கடும் பாதுகாப்பு



அத்துருகிரியவில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட 'கிளப் வசந்த' என்றழைக்கப்படும் சுரேந்திர வசந்த பெரேராவின் இறுதி சடங்கு தொடர்பில் கொழும்பிலுள்ள மலர்ச்சாலைக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதையடுத்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. கிளப் வசந்தவின் பூதவுடலை வைக்க அனுமதிக்க வேண்டாமென மலர்ச்சாலைக்கு அச்சுறுத்தல் விடுத்து தொலைபேசி

06

### State Fertilizer என்ற பெயரில்

## அரச உர நிறுவனங்கள் இரண்டும் ஒன்றாகின



அரசாங்கத்தின் உர நிறுவனங்களான கொமர்ஷல் உரம் மற்றும் சிலோன் உர நிறுவனம் ஆகிய இரண்டும் நேற்று முதல் (12) State Fertilizer

06

## விசா இன்றி நாட்டில் தங்கியிருந்த 6 இந்தியப் பிரஜைகள் கைது

### வெளிநாட்டு சிகரட்டுகளும் மீட்பு



கட்டுநாயக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆடியம்பலம பகுதியில் விசா இன்றி தங்கியிருந்த 06 இந்தியர் (11) கைது செய்யப்பட்டுள்ளதாக கட்டுநாயக்க பொலிஸார் தெரிவித்தனர். 25, 26, 33, 38, 39 மற்றும் 42 வயதுடைய

06

92 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# நகர்வலம்









கொழும்பு15 முகத்துவாரம் ஸ்ரீ சுவர்ணாம்பிகா சமேத ஸ்ரீ அருணாசலேஸ்வர ஆலய வருடாந்த இரதோற்சவம், சிவஸ்ரீ கோபாலகிருஷ்ண குருக்கள் தலைமையில் நடைபெற்று வசந்தமண்டப பூஜை நடைபெறுவதையும் தொடர்ந்து, ஸ்ரீ சுவர்ணாம்பிகா சமேத ஸ்ரீ அருணாசலேஸ்வர பெருமான், அம்பாள் வீதி வலம் வந்து இரதத்தில் ஆரோகணித்துச் செல்வதையும், கலந்து கொண்ட பக்தர்களையும் காணலாம்.



புரவலர் புத்தகப் பூங்காவின் ஸ்தாபகர் புரவலர் ஹாசிம் உமரின் 'கல்விக்கு கரம் கொடுப்போம்' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ இரண்டாவது கட்டமாக நேற்று மேலும் ஐந்து மாணவர்களுக்கு மடிக்கணினிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் புரவலர் பூங்கா ஸ்தாபகர் ஹாஸிம் உமர், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், ஐக்கிய மக்கள் சக்தியின் உபதலைவி உமாச்சந்திரா பிரகாஷ் ஆகியோருடன் மடிக்கணினி பெற்றுக் கொண்ட மாணவர்களையும் காணலாம்.

(பட உதவி: அம்பாறை மத்திய தினகரன் நிருபர்)

## 'தூண்டில்கள் துடிக்கின்றன' கவிதை நூல் வெளியீட்டு விழா



கம்மல்துறை கவிஞர்களின் 100 கவிதைகள் தொகுக்கப்பட்ட "தூண்டில்கள் துடிக்கின்றன" கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை 14ஆம்திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9:30க்கு கம்மல்துறை அல் பலாஹ் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

'கவிஞர் போருத் தொட்ட ரிஸ்மி அரங்கத்தில்' நடைபெறவுள்ள இவ்விழாவுக்கு பலகத்துறை கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் கலாபூஷணம் எம். ஜே. எம். தாஜுதீன் தலைமை வகிப்பார்.

விழாவின் பிரதம அதிதிகளாக ஓய்வு நிலை தேர்தல் ஆணையாளர் நாயகம் எம். எம். மொஹமட் நளீமியும், விசேட அதிதியாக தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர். தே. செந்தில் வேலவரும் கலந்து கொள்கிறார்கள்.

சிறப்பு அதிதிகளாக, பன்னூலாசிரியர், கவிஞர், ஒலிபரப்பாளர் அஷ்ரப் சிஹாப்தீன், வலம்புரி கவிதா வட்டத்தின் தலைவர் கலாபூஷணம், கவிமணி என். நஜ்முல் ஹுசைன், சிரேஷ்ட ஊடகவியலாளரும் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தமிழ் வெளியீடுகளுக்கான முன்னாள் ஆலோசகருமான 'ஈழத்து நூன்' கலா பூஷணம் எம். ஏ. எம். நிலாம் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

கம்மல்துறை அல் பலாஹ் கல்லூரியின் அதிபர் எம். யு. பாயிஸ் நளீமியும், பலகத்துறை பெரிய பள்ளிவாசல் தலைவர் எம் முஹம்மத்தும் கௌரவ அதிதிகளாகக் கலந்து கொள்கிறார்கள்.

நூலின் முதற் பிரதியை ஓய்வு நிலை தேர்தல் ஆணையாளர் நாயகம் எம். எம். மெஹமட் நளீமி பெற்றுக் கொள்வார். கம்மல்துறை இக்பால் தலைமையில் நடைபெறும் கவியரங்கில் பலகத்துறை இளம் கவிஞர்கள் கலந்து கொள்கின்றனர். கவிஞர்களுக்கு 'தமிழ் ஆசான் ஜெலீல் அதிபர் விருது' வழங்கும் நிகழ்வு கலைஞர் எம். ஜே.எம். சாதிக் தலைமையில் நடைபெறும். அபூசஊத் சைலாஸ் நிகழ்வுகளை ஒருங்கிணைக்க ஏ. எல். எம். சல்மான் மற்றும் சப்ரான் சலாவுதீன் ஆகியோர். நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவார்கள்.



சமயங்கள் தொடர்பான விபரங்களை பெறுவதற்கான அலுவலகமொன்று கொழும்பு 13 ஜம்பெட்ட வீதியில் அமைக்கப்பட்டுள்ளது. இதனை தெல்லிப்பளை ஸ்ரீ துர்கா குருகுல வேத ஆகம பாடசாலை அதிபர் விஷ்வ நாராயண சர்மா திறந்து வைப்பதனையும் அலுவலக இயக்குனர் அம்பிகா ஜோதிட நிலைய அதிபர் எஸ்.சிவநேசன் சர்மா அருகில் நிற்பதனையும் காணலாம்.

## உடப்பு கல்வி அபிவிருத்தி சபையின் அறிமுக நிகழ்வு

**(உடப்பு குறூப் திருபர்)**

உடப்பு கல்வி அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் உடப்பு மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட "உடப்பு கல்வி அபிவிருத்திச் சபையின்" அறிமுக நிகழ்வும் முதலாவது கல்வி அபிவிருத்திச் செயற்பாடாக தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையை எதிர்நோக்கும் மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு அறிமுக நிகழ்வும் இன்று சனிக்கிழமை(13) காலை 8 மணிக்கு உடப்பு தமிழ் மகாவித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே மேற்படி நிகழ்வுக்கு கல்வி அபிவிருத்திச்சபை அங்கத்தவர்கள், மற்றும் அதிபர்கள் ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் மற்றும் ஒற்றப்பனை றோமன் கத்தோலிக்க பாடசாலை, ஆண்டிமுனை ஸ்ரீ கிருஷ்ணா ஆரம்பப் பாடசாலை, உடப்பு தமிழ் மகா வித்தியாலய தரம் ஐந்து மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

நிகழ்வுக்கான தலைமையை வித்தியாலய அதிபர்.பூ.சுகந்தன் ஏற்பதோடு, பிரதம அதிதியாக பேராசிரியர் வ.சிவலோகதாசன் கலந்து கொள்வார். விஷேட அதிதியாக உடப்பு கல்வி அபிவிருத்திச் சபையின் பொறுப்பாளர் முன்னாள் அதிபர் மு.சொக்கலிங்கசாமி கலந்து கொள்வார்.





கம்பஹா மாவட்ட ஐக்கிய முஸ்லிம் சங்கம் ஏற்பாட்டில், 2025ஆம் ஆண்டு பரீட்சை எழுதவுள்ள க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் விசேட செயலமர்வொன்று வத்தளை ஹுனுப்பிட்டி ஸாஹிரா மாகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் ஸீனத் டிரேடிங் பிறைவேட் லிமிடெட் நிறுவனத்தின் உரிமையாளர் மாஹிர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார். 2025 ஆம் ஆண்டு பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கு சீ.ஆர். அப்பியாசப் புத்தகங்கள் வழங்கப்படுவதையும் கலந்துக்கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

## வெளிநாடுகளில் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மூவருக்கு உதவிகள்

**மஸ்கெலியா நிருபர்**

மலையகத்தைச் சேர்ந்த மூன்று பேர் வெளிநாடுகளில் பட்டப்படிப்பை மேள்கொள்வதற்காக மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்தின் ஊடாக நிதியுதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இன்று சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு செட்டியார் தெருவில் அமைந்துள்ள மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்தின் தலைமை அலுவலகத்தில் அதன் தலைவர் ஏ. சிவஞானம் தலைமையில் மன்றத்தின் போஷகர்கள், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் முன்னிலையில் இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

கிழக்கு பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம் மற்றும் சார்க் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பட்டப்படிப்பை மேற்கொண்ட பலாங்கொடை,வலேபொட தோட்டத்தைச் சேர்ந்த சிவசெல்வம் அருள்நேசன் பெங்களுரு பல்கலைக்கழகத்தில் தமது கலாநிதி பட்டத்தை மேற்கொள்வதற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தற்காலிக அரசியல் விஞ்ஞான விரிவுரையாளராகக் கடமையாற்றும் அட்டன் பன்மூர் தோட்டத்தைச் சேர்ந்த சுந்தரராஜ் ஸ்ரீயாணி, தமிழ்நாடு கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தில் முதுமாணி பட்டப்படிப்பை மேற்கொள்ளவும், சப்ரகமுவ பல்கலைக் கழகத்தில் உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றும் பலாங்கொடை மேற்பிரிவைச் சேர்ந்த சந்திரகுமார் தர்ஷினி, நோர்வே நாட்டின் பேர்ஜின் பல்கலைக்கழகத்தில் தமது முதுமாணி பட்டப்படிப்பை மேற்கொள்ளவும் மேற்படி நிதியுதவிகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இலங்கைக்கான சவூதி அரேபிய நாட்டின் தூதுவர் ஹாலித் ஹமூத் என். அல்கஹ்தானி, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கை நேற்றுமுன்தினம் (11) கொழும்பில் அமைந்துள்ள சவூதி அரேபியத் தூதரகத்தில் சிநேகபூர்வமாக சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

(படம்:கந்தளாய் தினகரன் நிருபர்)

## ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணனின் "செப்டம்பர் கறுப்பழகி" நாவல் வெளியீடு




ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணனின் "செப்டம்பர் கறுப்பழகி" நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 5.53க்கு கொழும்பு 13, கொட்டாஞ்சேனை ஐங்கரன் மண்டபத்தில் நடை பெறவுள்ளது. ஜேம்ஸ் பொன்ட் 007 கதைப் பாணியில் இலங்கை இலக்கிய உலகில் வெளிவரும் முதலாவது நாவல் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தினகரன் ஆசிரியர் தே. செந்தில் வேலவர் தலைமையில் தேசமான்ய லயன் தர்மராஜா தவசீலன் முன்னிலையில் நடைபெறும் இவ்விழாவில், முன்னாள் பிரதி அமைச்சரும் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவருமான பிரபா கணேசன் IDMNC சர்வதேச உயர் கல்வி நிறுவனத்தின் தவிசாளரும் ஜனகன் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி ஜனகன் விநாயகமூர்த்தி ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் அதிபர் மூக்கப்பிள்ளை மூவேந்தன், சமூக சேவகியும் கலை இலக்கிய செயற்பாட்டாளருமான கலாநிதி கௌசலாதேவி கோவிந்தப்பிள்ளை, சமூக சேவகரும் ஆன்மிகவாதியுமான தேசமான்ய பிச்சை கிருஷ்ணா, சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளரும் சங்கவி தியேட்டரின் உரிமையாளருமான கலாநிதி துரைராசா சுரேஷ், டவர் ஹோல் பவுண்டேஷனின் தமிழ்ப் பிரிவுப் பொறுப்பாளர் கலாநிதி எஸ். ஜெயபிரகாஷ் சர்மா, யுனைடட் ஆர்ட் ஸ்டேஜின் தலைவர் கலாபூஷணம் கே. செல்வராஜன், மக்கள் வங்கி முகாமையாளர் எஸ். மணிமாறன், அகில இலங்கை சபரிமலை குருசுவாமிகள் ஒன்றியத்தின் தலைவர், கலைஞர் ஆறுமுகம் ரவீந்திரன், பிரபல பட்டிமன்றப் பேச்சாளர் கலாநிதி வைத்தியமாநிதி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளார்கள்.

வீரகேசரி, வீரகேசரி வாரவெளியீடு ஆகியவற்றின் பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன், தமிழன் பிரதம ஆசிரியர் ஆர். சிவராஜா, தமிழ் மிரர் பிரதம ஆசிரியர் அழகன் கனகராஜ், கெப்பிட்டல் எப். எம் வானொலியின் முகாமைத்துவ பணிப்பாளர் எம். எப். சியா உல் ஹசன், ஞாயிறு தினக்குரலின் உதவி ஆசிரியர் லெப்டின் ராஜ், பிரபல கட்டடக் கலைஞர் எம். நந்தகுமாரன், வருணி ஜுவலர்ஸ் அதிபர் கே. யோகரட்ணம், சாய் டெய்லர்ஸ் அதிபர் ரதீஜா சபாபதி, ரஜனி துலானி ட்ரவல்ஸ் என். ரஜனிகாந்த், சினிமா, தொலைக்காட்சி மேடை நாடக நடிகர் கலைஞர் விஜேசுந்தரம் ஆகியோர் ஊடக விருந்தினர்களாக கலந்து கொள்வார்கள். கலைஞர் தேவர் முனிவர் வரவேற்புரையாற்ற கவிஞர் தாமரைச் செல்வி நூல் அறிமுகவுரையாற்றுவார். தினகரன், தினகரன் வார மஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தலைமை உரையாற்றுவார்.

இவ்விழாவில், முன்னாள் பிரதி அமைச்சரும் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவருமான பிரபா கணேசன், IDMNC சர்வதேச உயர் கல்வி நிறுவனத்தின் தவிசாளரும் ஜனகன் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி ஜனகன் விநாயகமூர்த்தி ஆகியோர் விஷேட உரைகளை ஆற்றவுள்ளனர். நூல் ஆசிரியரைப் பற்றிய கவிதையொன்றை பிரபல பின்னணிப் பாடகி கவிதாயினி அருணா அருந்தவம் பாடவுள்ளார். அதனைத் தொடர்ந்து நூல் வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது.

நூலின் முதற்பிரதியை IDMNC சர்வதேச உயர் கல்வி நிறுவனத்தின் தவிசாளரும் ஜனகன் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி ஜனகன் விநாயகமூர்த்தி வெளியிட்டு வைப்பார். திருமதி நீரஜா யோகரட்ணம் நன்றியுரையாற்றுவார். ஊடகவியலாளரும் சிரேஷ்ட அறிவிப்பாளருமான இளையதம்பி சந்திரனும் வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் பிரபல அறிவிப்பாளருமான சந்திரிகா நிரோஷன் ஆகியோர் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவார்கள்.

கெப்பிட்டல் வானொலி இலத்திரனியல் ஊடக அனுசரணை வழங்கவுள்ளது.

## சீனன் கோட்டை நளீம் ஹாஜியார் விளையாட்டரங்கில் கிரிக்கெட் சுற்றுப் போட்டி

**பேருவளை பீ.எம் முக்தார்.**

பேருவளை சீனன்கோட்டை தம்புள்ள டேன்சரஸ் விளையாட்டுக் கழகம் தம்புள்ள டேன்சரஸ் வெற்றிக் கிண்ணத்திற்காக ஏற்பாடு செய்துள்ள அணிக்கு 11 பேர் கொண்ட மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி (20.07.2024) முதல் 28 வரை சீனன் கோட்டை நளீம் ஹாஜியார் விளையாட்டரங்கில் நடைபெறும்.

இச்சுற்றுப் போட்டியில் சீனன் கோட்டை பகுதியைச் சேர்ந்த 32 கிரிகெட் கழகங்கள் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இறுதிப் போட்டி எதிர்வரும் 28 ஆம் திகதி மேற்படிக் கழக ஆலோசகர் அல் ஹாஜ் சர்பான் முஸம்மில் தலைமையில் நடைபெறுவதோடு பாராளுமன்ற உறுப்பினரும் சீனன் கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர் சங்கத் தலைவருமான மர்ஜான் பளீல், பெல்மதுள்ளை ஸூபாஷ் ஜெம்ஸ் அதிபதி கே.எஸ்.எஸ் கருணாரத்ன (பபா) ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளதாக கழக ஆலோசகர் அல் ஹாஜ் மதனி தெரிவித்தார். இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு வெற்றிக்கிண்ணத்தோடு பெறுமதி வாய்ந்த பணப் பரிசும் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இறுதிப் போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்து வீச்சாளர், சகல துறை வீரர் ஆகியோருக்கும் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படும். பரிசளிப்பு விழாவில் கழக தலைவர் அர்கம் அன்ஸார் உட்பட உறுப்பினர்கள் மற்றும் ஊர் பிரமுகர்கள், பலரும் கலந்து கொள்வர்.

## Junior Super Singer குரல் தேர்வு யாழ். மருதனார் மடத்தில் இன்று

*C J Pramoters & Dhedjassam Event Solutions* அமைப்பு வடமாகாணத்தில் ஜூனியர் சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியொன்றை நடத்தவுள்ளது.

இந்தப் போட்டி முதலில் மாவட்ட ரீதியில் நடத்தப்பட்டு இறுதிப் போட்டி 2024 செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி நடத்தப்படும். இறுதிப் போட்டி யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய கலாசார நிலையத்தில் நடத்தப்படும்.

இந்த இறுதிப் போட்டியில், புகழ் பெற்ற கர்நாடக இசைப் பாடகி. டி. கே. பட்டம்மாளின் பேத்தியான *Junior Super Singer* குரல் தேர்வு யாழ். மருதனார் மடத்தில் இன்று நித்ய ஸ்ரீ மகாதேவன், தமிழ் திரைப்பட பாடகரும் விஜய் தொலைக்காட்சியில் நடைபெற்ற சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பட்டத்தை வென்றவருமான திவாகர், சுப்பர் சிங்கர் புகழ் தென்னிந்திய பின்னணிப் பாடகர் சத்தியபிரகாஷ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்தப் போட்டியின் முதலாவது குரல் தேர்வு யாழ்ப்பாணம், பிரதான வீதியிலுள்ள திருமுறைக்கலாமன்றத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்தப் போட்டியின் இரண்டாவது குரல் தேர்வு யாழ்ப்பாணம், மருதனார்மடத்தில் உள்ள வடஇலங்கை சங்கீத சபை மண்டபத்தில் இன்று 13ஆம் திகதியும் நாளை 14ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.



### நன்னடத்தையின் அடிப்படையில்

# மரண தண்டனை, ஆயுள் தண்டனை கைதிகளுக்கு தண்டனை குறைப்பு

## நீதியமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மரண தண்டனை மற்றும் ஆயுள் தண்டனைகளை அனுபவிக்கும் சிறைக்கைதிகளுக்கு அவர்களின் நன்னடத்தையின் அடிப்படையில் தண்டனைக் காலத்தை குறைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக நீதி, அரசியல் மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எனினும் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டு சிறைத் தண்டனை அனுபவித்து வருவோருக்கு இதுபோன்ற எந்தவித சலுகையும் வழங்கப்படமாட்டாது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் தமது கேள்வியின் போது; நாட்டின் சிறைச்சாலை கட்டமைப்பில் 13 ஆயிரம் கைதிகள் மாத்திரமே இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் தற்போது 30 ஆயிரம் கைதிகள் சிறைச்சாலைகளில் உள்ளார்கள் என்றும் அவர்களில் 80 வயதை அண்மித்த சிரேஷ்ட பிரஜைகளும் காணப்படுவதாகவும் அவர்கள் உடல், உளரீதியில் பாதிக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என சபையில் வலியுறுத்தினார். அதற்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்த பிரச்சினைக்கு கடந்த ஒன்றரை வருடகாலமாக தீர்வு காண நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்துள்ளோம்.

சிறைச்சாலைகளில் உள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் கடுமையான நோய்களால் பாதிக்கப்பட்டவர்களை விடுதலை செய்வதற்கு வசதியாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் மூன்று மருத்துவ நிபுணர்களை உள்ளிடக்கிய குழு நியமிக்கப்பட்டது.அந்த குழுவின் பரிந்துரைக்கு அமைய தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேற்படி குழுவுக்கு முதற் கட்டமாக 100 சிறைக்கைதிகள் அனுப்பிவைக்கப்பட்ட போதும் அந்த குழுவானது இரத்தச்சோகை நோயினால் பாதிக்கப்பட்ட கைதியைக் கூட விடுதலை செய்ய பரிந்துரைகளை வழங்கவில்லை.

இவ்வாறான நிலையிலேயே அண்மையில் தண்டனைக் சட்டக்கோவையை திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஏதேனும் குற்றச் செயலுக்காக பல ஆண்டுகாலமாக தடுப்புக் காவலில் வைக்கப்படும் நபருக்கு நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்படும் போது தண்டனையளிக்கப்படும் திகதியிலிருந்து தான் தண்டனைக் காலம் கணிக்கப்படுகிறது.

06

### விசா விநியோக விலை மனு விவகாரம்

# தடயவியல் கணக்காய்வுகளுக்கு உட்படுத்த அரச நிதிக்குழு முடிவு

## சிக்கல்களை நிவர்த்திக்க முடியுமெனவும் ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

விசா விநியோக விலை மனு கோரல் தொடர்பில் நிலவும் சிக்கல்களை நிவர்த்தி செய்யும் வகையில் அது தடயவியல் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என அரச நிதி தொடர்பான குழு பரிந்துரைத்துள்ளதாக அக்குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

விசா விநியோக பணிகளை வெளிநாட்டு நிறுவனத்துக்கு வழங்கியுள்ள விவகாரத்தில் பல சிக்கல்கள் காணப்படுவதாக சபையில் தெரிவித்த அவர், போட்டித்தன்மையான விலை மனு கோரல் எதுவும் இல்லாமல் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும் எனவே இந்த விலைமனுக்கோரல் முழுமையாக தடயவியல் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசா விவகாரம் தொடர்பில் அரச நிதி தொடர்பான குழுவின் அறிக்கையை சபைக்கு சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,



குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் வெளிநாட்டவர்களுக்கு விசா விநியோகிக்கும் பணியை வெளிநாட்டு கூட்டு நிறுவனம் ஒன்றுக்கு வழங்கியுள்ளமை தொடர்பில் சமூகத்தில் பாரிய சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பில் அரச நிதி தொடர்பான குழுவில் விசாரணைகளை மேற்கொண்ட போது பல சிக்கல்களை எதிர்கொள்ள நேர்ந்தது. குழுவில் ஆஜரான அதிகாரிகள் எம்மை அலட்சியப்படுத்தும் வகையில் செயற்பட்டமை அதிருப்திக்குரியது.

அந்த வகையில் நாம் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் அதிகாரிகள் முன்வைத்த விடயங்களை முழுமையாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்துள்ளோம். அந்த அறிக்கையை சபைக்கு சமர்ப்பிக்கின்றேன்.

வெளிநாட்டவர்களுக்கு விசா விநியோகிக்கும் சேவையை வி.எப்.எஸ் நிறுவனத்துக்கு வழங்கியுள்ளதாகவும் இந்த நிறுவனம் 145 நாடுகளில் சேவை வழங்குவதாக குறிப்பிடப்பட்டது.ஆனால் இந்த சேவை வி.எப்.எஸ். நிறுவனத்துக்கு வழங்கப்படவில்லை மாறாக ஜி.பி.எஸ் என்று கூட்டு நிறுவனத்துக்கே வழங்கப்பட்டுள்ளது.

கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களை முழுமையாக ஆராய்ந்து எமது அவதானிப்புக்களை முன்வைத்துள்ளோம்.போட்டித்தன்மையான விலை மனு கோரல் எதுவும் இல்லாத வகையில் தான் இந்த நிறுவனம் ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளது.

06

# ஜனாதிபதி தேர்தலை நடத்துவதில் சட்டம் மற்றும் நிதித் தடைகள் எதுவும் இல்லை



ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதில் சட்டம் மற்றும் நிதித் தடைகள் எதுவும் இல்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சட்டம் மற்றும் நிதித் தடைகள் காரணமாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆற்றல் குறித்து பல்வேறு தரப்பினர் குறை தெரிவித்துவரும் நிலையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தேர்தலுக்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு சட்டப்பூர்வ அனுமதி இருப்பதாக குறிப்பிட்ட தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தேர்தலுக்கான உரிய நிதியை தேர்தல் திணைக்களம் முழுமையாகக் கொண்டிருப்பதாகவும் கூறினார்.

தேர்தலை சுமூகமாக நடத்துவதை உறுதி செய்வதற்காக சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகள், அரசாங்க அச்சகத் திணைக்களம் மற்றும் தொடர்புபட்ட நிறுவனங்களின் அதிகாரிகளுடன் கலந்துரையாடியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தலுக்கான செலவு குறித்து அடுத்த வாரம் நிதி அமைச்சின் அதிகாரிகள் சுருக்கமாக கலந்துரையாடவிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

06

# புத்தளம், அநுராதபுரம் வீதியில் இரு வாகனங்கள் மோதி விபத்து

புத்தளம் அநுராதபுரம் பிரதான வீதியில் சொகுசு காரொன்றுடன் கெப் ரக வாகனமொன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

காரில் பயணித்தவர்கள் அதிர்ஷ்டவசமாக காயங்கள் எதுவுமின்றி உயிர்த்தப்பியுள்ளனர்.

இந்த விபத்து வியாழக்கிழமை (11) மாலை புத்தளம் அநுராதபுரம் பிரதான வீதியின் நீர் வழங்கல் அதிகாரசபை அலுவலகத்துக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

அநுராதபுர பகுதியிலிருந்து புத்தளம் நோக்கிச் சென்ற சொகுசு காருடன் புத்தளத்திலிருந்து அநுராதபுரம் நோக்கிச் சென்ற கெப் ரக வாகனம் கட்டுப்பாட்டை



இழந்து காருடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன்போது, கார் வீதியின் நடுவே கவிழ்ந்து முற்றாக சேதமாகியுள்ளதுடன், காரில் பயணித்தவர்கள் அதிஷ்டவசமாக உயிர்த்தப்பியுள்ளனர். கெப் ரக வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

### பிரிட்டன் பாராளுமன்றத்தில்

# பகவத்கீதை மீது சத்தியம் செய்து பதவியேற்றார் ஷிவானி ராஜா

பிரிட்டன் தேர்தலில் வெற்றி பெற்ற இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 29 வயதான ஷிவானி ராஜா என்ற பெண் எம்.பி. பிரிட்டன் பாராளுமன்றத்தில் ‘பகவத் கீதை’ மீது சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றார்.

பிரிட்டனில் நடைபெற்ற தேர்தலில் லீசெஸ்டர் கிழக்கு தொகுதியில் போட்டியிட்டு அவர்



வெற்றி பெற்றார். இந்தத் தொகுதி தொழிலாளர் கட்சியின் கோட்டையாக கடந்த தேர்தல்களில் இருந்துள்ளது. இந்த சூழலில் ஷிவானி அங்கு வெற்றி பெற்றுள்ளார். அவர் கன்சர்வேடிவ் கட்சி சார்பில் போட்டியிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினராக லீசெஸ்டர் கிழக்கு தொகுதியை பிரதிநிதித்துவபடுத்துவது தனக்கு பெருமையாக இருப்பதாகவும், பகவத் கீதையின் மீது சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்பதாக அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.



‘Starlink’ எனப்படும் வலையமைப்புடன் இலங்கையை இணைப்பதற்கு விண்ணப்பிக்கும் நடைமுறையை துரிதப்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சந்திப்பு நடைபெற்றது. காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன மற்றும் Starlink India Market Access இன் பணிப்பாளர் பர்னில் ஊர்த்வரேஷே ஆகியோருக்கிடையில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

# கொவிட் 19 வைரஸ் தொற்றால் உலகில் வாரம் 1,700 பேர் பலி

### உலக சுகாதார அமைப்பு அறிவிப்பு

கொவிட் 19 வைரஸ் தொற்றால் தற்போது ஒவ்வொரு வாரமும் உலகில் சுமார் 1,700 பேர் உயிரிழப்பதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

தொற்றுக்குள்ளானவர்களுக்கு தடுப்பூசி போட வேண்டுமென உலக சுகாதார அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இத் தொற்று கர்ப்பிணித் தாய்மார்களையும் சிறு குழந்தைகளையும் பாதிப்பதாக புதிய ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. 2019 ஆம் ஆண்டின் இறுதிக்காலப்பகுதியில் சீனாவின் வுஹானில் கொரோனா வைரஸ் முதன் முதலில் கண்டறியப்பட்டது. இதனைத் தொடர்ந்து 2023 ஆம் ஆண்டு மே மாதம் வரை சர்வதேச பொது சுகாதார அவசர நிலையாக அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### புத்தளம் வனாத்தவில்லுவில்

# 355 Kg கொக்கெய்ன் எரியூட்டி அழிப்பு

பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்கள் புத்தளம் வனாத்தவில்லு பிரதேசத்தில் பொலிஸாரால் நிர்மாணிக்கப்பட்ட எரியூட்டிகளூடாக எரித்து அழிக்கப்பட்டுள்ளன.

இதன்போது 782 கோடியே 09 இலட்சம் ரூபா (7,829 மில்லியன்) பெறுமதியான 355 கிலோ 881 கிராம் கொக்



கெய்ன் போதைப்பொருள் எரித்து அழிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.


கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்திலிருந்து போதைப்பொருள் ஒழிப்பு பணியக அதிகாரிகளால் நேற்று முன்தினம் காலை போதைப்பொருள் பெறப்பட்டு, விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பில் வனாத்தவில்லு, லாக்டோஸ் வத்தை பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டது.

06

தினகரன்
THINAKARAN

# 92 வருடங்களுக்கு முன் தினகரன்

## இன்று 13 ஜூலை 1932



ரப்பரின்றி வேறு பயிர்கள் உற்பத்தி

பேராதனையில் கூடிய தோட்ட விளைபொருள் கமிட்டி

அன்னாசிப்பழ முயற்சி

முந்திரிக்கொட்டை உற்பத்தியால் பெறக்கூடிய பெரும் லாபம்

கண்டி, ஜூலை, 7—

நேற்றையதினம் பேராதனையில், விவசாயத் தொழில் காரியநிர்வாக சபையின் தோட்ட விளை பொருள் கமிட்டியினரும், உணவுப் பொருள் கமிட்டியினரும் கூடினர். இக்கூட்டத்தில் ரப்பருக்குப் பதிலாக, வேறென்ன பொருள்களை உற்பத்தி செய்யலாம் என்ற கேள்வி கேட்கப்பட்ட போது, மிளகும், டெரிஸும், நேர்வாளமும், டங்கும், காப்பியும் அன்னாசியும், பாக்கும் “பல்ஸார்” என்னும் எண்ணெய் எடுக்கப்படும் ஒரு வகை மரமும் உற்பத்தி செய்யப்படலாம் என்று கூறப்பட்டது. கசுக்கொட்டை (முந்திரிக்கொட்டை) விளைவு செய்யக்கூடியதாய் இருக்கும் என்று டாக்டர் யங்மன் விவாதித்தார். இலவங்க மரங்களை உற்பத்தி செய்யலாமென்றும் சிலரால் கூறப்பட்டது.

...கின்றன். இங்ஙனமே நிலங்களின் குணாகுணங்கள் விவசாயிகளுக்கு சந்ததி சந்ததியாக நன்றாகத் தெரிய வருகிறது. ஆனால் இங்குள்ள விவசாயத் தொழிலாளர்கள் அப்படிச் செய்வதாய்க் காணவில்லை. அவர்கள் இடத்துக்கிடம் மாறிக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் ஒரு பகுதியைக் குறித்து ஸ்திரமான அநுபவம் அவர்களுக்குக் கிடைக்கிறதில்லை.

இவ்விஷயங்களில், விவசாயத் தொழிலாளருக்கு அறிவு புகட்டுவதில் கமிட்டி கருத்துச் செலுத்த வேண்டும். துண்டுப் பத்திரங்கள் மூலமாகக் கமிட்டியின் காரியதரிசி இதைச் செய்யலாம்.

வெவ்வேறு ஜில்லாக்களில் உண்டாகக் கூடிய விளைபொருள்களைக் குறித்த விவரங்களைக் கூறி உதவி...

## ரப்பரின்றி வேறு பயிர்கள் உற்பத்தி

### பேராதனையில் கூடிய தோட்ட விளைபொருள் கமிட்டி

### அன்னாசிப்பழ முயற்சி

முந்திரிக்கொட்டை உற்பத்தியால் பெறக்கூடிய பெரும் லாபம்

நேற்றையதினம் பேராதனையில், விவசாயத் தொழில் காரியநிர்வாக சபையின் தோட்ட விளை பொருள் கமிட்டியினரும், உணவுப் பொருள் கமிட்டியினரும் கூடினர். இக்கூட்டத்தில் ரப்பருக்குப் பதிலாக, வேறென்ன பொருள்களை உற்பத்தி செய்யலாம் என்ற கேள்வி கேட்கப்பட்ட போது, மிளகும், டெரிஸும், நேர்வாளமும், டங்கும், காப்பியும், அன்னாசியும், பாக்கும் "பல்ஸார்" என்னும் எண்ணெய் எடுக்கப்படும் ஒரு வகை மரமும் உற்பத்தி செய்யப்படலாம் என்று கூறப்பட்டது.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

# புதிய பட்டதாரி ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு

**கொழும்பு தினகரன் நிருபர்**

அண்மையில் மேல் மாகாணத்தில் அரசாங்க பாடசாலைகளுக்கு புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களை வரவேற்று கௌரவிக்கும் நிகழ்வு இன்று (13) சனிக்கிழமை கொழும்பு ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள அல் ஹிதாயா கல்லூரியில் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை நடைபெறும்.

மேல் மாகாண புத்திஜீவிகள் அமைப்பின் ஏற்பாட்டில் அதன் தலைவர் ஏ.எஸ்.முஹம்மத் தலைமையில் எம்.சி.பஹர்டீன் கேட்போர் கூடத்தில் இந்நிகழ்வு நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கொழும்பு மாநகர முன்னை நாள் மேயரும் ஐக்கிய அரபு எமிரேட்சின் இலங்கைக்கான முன்னை நாள் தூதுவருமான அல் ஹாஜ் ஹுஸைன் முஹம்மத் கலந்துகொள்வார்.

# வலம்புரி கவிதா வட்ட கவியரங்கம்



வலம்புரி கவிதா வட்டத்தின் 102ஆவது கவியரங்கம் இம்மாதம் 20ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சந்தக் கவிமணி கிண்ணியா அமீர் அலி தலைமையில் நடைபெறவுள்ள

06

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆனி மாதம் 29ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 முஹர்ரம் பிறை 06

### குறள் தரும் சிந்தனை



நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

நோய் என்ன? நோய்க்கான காரணம் என்ன? நோய் தீர்க்கும் வழி என்ன? இவற்றை முறையாக ஆராய்ந்து சிகிச்சை செய்ய வேண்டும். (உடல் நோய்க்கு மட்டுமின்றிச் சமுதாய நோய்க்கும் இது பொருந்தும்)

# பணிப்புறக்கணிப்பை தூண்டுவது எதிரணியினரின் அரசியல் தந்திரம்!

நாட்டில் சமீப காலமாக தொழிற்சங்கங்களின் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டங்கள் அதிகரித்துள்ளன. ஒருபுறம் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பை நடத்தியிருக்கின்றன. மறுபுறத்தில் ஏனைய அரசாங்க ஊழியர்களின் தொழிற்சங்கங்கள் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தன.

எமது நாட்டில் இது தேர்தல் ஆண்டாகும். தேர்தல் நெருங்கி வரும் வேளையில் வேலைநிறுத்தப் போராட்டங்களை முன்னெடுப்பது தொழிற்சங்கங்களின் இயல்பாகும். இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

தேர்தல் நெருங்குவதால் வேலைநிறுத்தப் போராட்டங்களில் இறங்குவதன் மூலம் அரசாங்கத்தை மிரட்டி சம்பள உயர்வு போன்ற கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளலாமென்று சில தொழிற்சங்கங்கள் எதிர்பார்க்கின்றன.

சில தொழிற்சங்கங்கள் வேறு விதமாகச் செயற்படுகின்றன. வேலைநிறுத்தங்களை அடிக்கடி மேற்கொள்வதன் மூலம், மக்கள் மத்தியில் அரசுக்கு விரோதமான அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதற்கு இத்தகைய தொழிற்சங்கங்கள் எதிர்பார்க்கின்றன. இவ்வாறான தொழிற்சங்கங்களின் பின்புலத்தில் எதிரணியின் சில சக்திகள் உள்ளமை தெளிவாகின்றது.

எதிரணியினரின் ஒரு ஆயுதம் வேலைநிறுத்தம் ஆகும். எதிரணியினர் ஒருசில தொழிற்சங்கங்களுடன் ஆதரவாகச் செயற்படுகின்றனர். அரசியல் களத்தில் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப பணிப்புறக்கணிப்பு போன்ற போராட்டங்களைத் தூண்டும் செயலில் எதிரணியின் சில சக்திகள் ஈடுபடுகின்றன. வேலைநிறுத்தப் போராட்டங்களை நடத்துவதன் ஊடாக, அரசாங்கத்துக்கு திண்டாட்டமான நிலைமையை ஏற்படுத்துவதற்கு எதிரணிகள் முற்படுகின்றன.

வேலைநிறுத்தப் போராட்டங்கள் தொடருமானால், அரசாங்கம் மீது மக்கள் அதிருப்தி கொள்வரென்பதும், அதன் மூலம் மக்களின் ஆதரவை வசீகரித்துக் கொள்ளலாமென்பதும் எதிரணிகளின் தந்திரமாகும்.

எதிரணியின் இத்தகைய தந்திரத்தில் சிக்கிக் கொள்ளும் சில தொழிற்சங்கங்கள் நாட்டில் உள்ளன. தொழிற்சங்கத் தலைவர்களுக்கு ஆசைவார்த்தை காட்டும் எதிரணி அரசியல்வாதிகளும் உள்ளனர். அதாவது தங்களது அரசாங்கம் எதிர்காலத்தில் பதவிக்கு வருமானால், பதவிகளை வழங்கலாம் என்பது ஆசைவார்த்தைகளில் ஒன்றாகும். தொழிற்சங்கத் தலைவர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்கப் போவதாக ஆசை காட்டப்படுவதுமுண்டு.

தொழிற்சங்கங்களின் தலைவர்கள் சிலர் எதிரணி அரசியல்வாதிகளின் இவ்வாறான ஆசைவார்த்தைக்கு மயங்கி பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை நடத்துவதாகவும் தகவல்கள் வெளிவருகின்றன. அதாவது எதிரணி அரசியல்வாதிகள் சிலரின் தனிப்பட்ட நலன்களுக்காக வேலைநிறுத்தப் போராட்டங்கள் நடத்தப்படுவதுமுண்டு.

இவ்வாறான வேலைநிறுத்தங்களால் பாதிக்கப்படுவது யாரென்பது மக்களுக்குத் தெரியாத விடயமல்ல. அப்பாவி மக்களும், மாணவர்களுமே பாதிக்கப்படுகின்றனர். அரசாங்கத்தின் சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியாமல் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். மாணவர்களின் கல்வியும் பெரிதும் பாதிக்கப்படுகின்றது.

கடந்த காலத்தில் தென்னிலங்கையில் பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டங்களின் போது பின்னணியில் செயற்பட்ட அமைப்பு எதுவென்பது தெரியாத ஒன்றல்ல. பல்கலைக்கழகங்களுக்குள் சிறிய விடயங்களுக்கெல்லாம் பகிஷ்கரிப்பை மேற்கொள்வது, வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவது போன்ற செயற்பாடுகளின் பின்னணியில் இந்த அமைப்பினரே செயற்பட்டனர். பல்கலைக்கழக மாணவர்களை அரசியல்மயப்படுத்தியது இந்த அமைப்பினரேயாவர்.

தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களில் உருவெடுத்த இத்தகைய அரசியல் பின்புலப் போராட்டங்கள் படிப்படியாக வடக்கு, கிழக்கு பல்கலைக்கழகங்களிலும் தொற்றிக் கொண்டன. மாணவர்களின் கல்வியைச் சீர்குலைக்கும் காரியங்களிலேயே இந்த அரசியல் அமைப்பு செயற்பட்டது. அன்றைய காலத்தில் பொதுமக்களைக் கொன்றொழித்து விட்டு, இன்று அரசியல் பேசுபவர்கள் இன்னுமே ஜனநாயகப் பாதைக்குத் திரும்பவில்லை என்பதுதான் உண்மை.

ஆசிரியர் தொழிற்சங்கங்கள் சிலவற்றின் பணிப்புறக்கணிப்புப் போராட்டங்களால் மாணவர்களின் கல்வி எத்தனை தூரம் பாதிக்கப்படுகின்றதென்பது வறிய மாணவர்களுக்கு மாத்திரமே புரியும். வசதி படைத்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களால் ரியூஷன் கல்வியை நாட முடியும். பாடசாலைக் கல்வி அவர்களுக்கு முக்கியமல்ல. ரியூஷன் கல்வியையே அவ்வாறான மாணவர்கள் நம்பியிருக்கின்னறனர்.

ஆனால் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் இலவசக் கல்வியையே நம்பியிருக்கின்றனர்.ரியூஷன் வகுப்புகளுக்குச் சென்று மாதாந்தம் பெருந்தொகை கட்டணம் செலுத்தும் நிலைமையில் வறிய மாணவர்கள் இல்லையென்பதை, பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டம் நடத்துகின்ற ஆசிரிய தொழிற்சங்கங்கள் ஒருதடவை சிந்தித்துப் பார்ப்பது அவசியம்.

கல்வி என்பது இன்று வர்த்தகமயமாகி விட்டது என்றுதான் சொல்ல வேண்டியுள்ளது. அரசாங்கப் பாடசாலைகளில் கற்பிக்கின்ற ஆசிரியர்களே பெரும்பாலும் தனியார் ரியூஷன் வகுப்புகளிலும் மாலை நேரங்களிலும், சனி மற்றும் ஞாயிறு தினங்களிலும் கற்பிக்கின்றனர். அவர்கள் தொடர்பாக மாணவர்கள் மத்தியில் அபிப்பிராயமொன்று உள்ளது.

அதாவது பாடசாலை வகுப்புகளில் நன்றாகக் கற்பிக்காத அவர்கள், ரியூஷன் வகுப்புகளில் மிகவும் நன்றாக அர்ப்பணிப்புடன் கற்பிப்பதாக மாணவர்கள் கூறுகின்றனர். இலவசக் கல்விக்காக அரசாங்கம் பெருந்தொகைப் பணத்தைச் செலவிடுகையில், மாதாந்தம் அரச சம்பளத்தைப் பெற்றுக் கொள்கின்ற ஆசிரியர்களில் ஒரு தொகையினர் இவ்வாறு நடந்து கொள்வது முறையல்ல.

கற்பித்தல் பணியென்பது சுயநலன் கருதாததாக இருந்தாலேயே அது போற்றப்படும். வெறுமனே பணம் கருதிய சேவையெனில் கற்பித்தல் பணியில் அர்த்தம் என்பதே இல்லாது போய்விடும்.

editor.tkn@lakehouse.lk

அளுத்மாவத்தை

# ஆனந்த ஐயப்பனின் 21 ஆம் ஆண்டு திருவிழா

## ஜூலை 16ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பம்

அளுத்மாவத்தை ஆனந்த ஐயப்பனின் 21ஆம் ஆண்டு திருவிழா எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 05.45 க்கு கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 17ஆம் திகதி மஞ்சமாதா திருப்பூஜையும், 18ஆம் திகதி நாகராஜா பூஜையும், 19ஆம் திகதி கருப்புசாமி பூஜையும், 20ஆம் திகதி பள்ளிவேட்டை திருவிழாவும், 21ஆம் திகதி தீர்த்த உற்சவமும் தேர்த்திருவிழாவும் நடைபெறவுள்ளன.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் அகில இலங்கை ஆனந்த ஐயப்ப தேவஸ்தான அறங்காவலர் சபையினர் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

30 ஆண்டுகளுக்கு முன்னர் 1993இல் ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி ஆலய நிர்மாணத்திற்கான அடிக்கல் நடப்பட்டது.

15.07.2002இல் முதலாவது மகா கும்பாபிஷேகமும் நடைபெற்றது. கும்பாபிஷேக கிரியா பூஜைகள் யாவும் சபரிமலை அதியுயர் தந்திரி பிரம்மஸ்ரீ கண்டரு மகேஸ்வரு தலைமையின் கீழ் கேரள செண்டை பஞ்சவாத்தியம் முழங்க பூஜைகள் நடைபெற்றன. 30.10.2015 அன்று மீண்டும் இரண்டாவது கும்பாபிஷேகமும் நடைபெற திருவருள் பாலித்தது. அதைத் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் ஆனிமாதம் வருடாபிஷேக கொடியேற்ற தீர்த்த ஆராட்டு திருவிழா நடைபெற்று வருகிறது.


2011ஆம் ஆண்டில் ஆலயத்தின் கொடித்தம்பம் புதிதாக புனரமைக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. இது முன்னர் இருந்ததைவிட 39 அடி உயரமாகவும், அத்துடன் சத்தியமான பொன்னு 18ஆம் படியும் ஐயப்பனின் அருளால் புனர்நிர்மானம் பெற்றன.



ஆலயம் அமைவதற்கு அறங்காவலர் ராஜு சிவராமனுக்கு பக்க துணையாக இருந்து பக்தியுடனும் அர்ப்பணிப்புடனும் இன்னும் செயற்பட்டுவரும் நிர்வாக சபை உறுப்பினர்களான க.கணேஷமூர்த்தி. எ.பால்ராஜ், வி.மனோரஞ்சன், சி.ஆனந்தீஷ்வரன், அ.ரமேஷ், சி.தியாகராஜ், பி.சுப்ரமணியம் ஆகியோர் உட்பட ஆலய குருசுவாமி மார்களும், ஆலயத் தொண்டர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஆலயத்தில் ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை ஐயப்ப சுவாமியின் காவல் தெய்வங்களான கருப்ப சுவாமிக்கு விசேட திரவிய அபிஷேக அலங்கார பூஜை நடைபெறுகிறது. இது அவரை குலதெய்வமாக வழிபடுவோருக்கு மிக முக்கியமான பூஜையாக இருக்கிறது.

அதுபோல் நாகராஜ பிரபுவுக்கு அவருடைய ஜென்ம நட்சத்திரமாகிய ஆயிலிய நட்சத்திரத்தில் விசேட பூஜை வழிபாடுகள் ஒவ்வொரு மாதமும் நடைபெறுகின்றன. இது நாகதோஷம், திருமண தடங்கல், மாங்கல்ய தோஷம், தீராத நோய்கள் உள்ளவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைகிறது. கார்த்திகை மாதம் 1ஆம் திகதி ஐயப்ப சுவாமிக்கு விரதம் இருக்கும் சாமிமார்களுக்கு மாலை அணிவிக்கப்படுகிறது. அதைத் தொடர்ந்து விசேட பூஜைகள், பஜனை, நடைபெற்று அன்னதானம் வழங்கப்படுகிறது. இரு முடி கட்டி, நெய் அபிஷேகம் செய்வதற்கும் ஐயப்ப விரத மாலை அணிந்த சுவாமிமார்களுக்கு சத்தியமான பொன்னு 18ஆம் படி ஏறுவதற்கு மண்டல பூஜை அன்றும், (கார்த்திகை முதலாம் திகதியிலிருந்து 41ம் நாள்) ஜனவரி முதலாம் திகதியும் ஜனவரி 14ம் திகதியும் மகரஜே வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இலங்கையிலிருந்து சபரிமலைக்கு போக முடியம். ஐயப்ப விரதமாலை அணிந்த சாமிமார்கள். இங்கு சத்தியமான பொன்னு 18ம் படி நெய் அபிஷேகம் செய்து விரதத்தை பூர்த்தி செய்கிறார்கள். இது இலங்கை ஐயப்ப சுவாமி பக்தர்களுக்கு கிடைத்திருக்கும் பெரிய வரப்பிரசாதமாகும்.



எச்.எச். விக்கிரமசிங்க

# பீ.மரியதாஸ்; எழுச்சியுற்ற மலையக இளைஞர்களின் அச்சொட்டான வார்ப்பு

அறுபதுகளில் எழுந்த 'சினம் கொண்ட பரம்பரையினர்' என்று இர. சிவலிங்கம் வரையறுத்த எழுச்சியுற்ற மலையக இளைஞர்களின் அச்சொட்டான வார்ப்பாக பீ.மரியதாஸ் உருவாகினார். மரியதாஸ் அட்டன் ஹைலன்ஸ் கல்லூரியில் இணைந்த காலம் மலையகம் எழுச்சிக்குரல் எழுப்பிய காலம்.

தமிழ்நாட்டில் பட்டப்படிப்பினை நிறைவுசெய்துவிட்டு மலையகத்திற்குத் திரும்பிய இர.சிவலிங்கம், எஸ்.திருச்செந்தூரன் ஆகிய இருவரும் அட்டன் ஹைலன்ஸ் கல்லூரியில் ஆசிரியர்களாகப் பதவியேற்று கல்விச் செயற்பாட்டிலும், சமூக மேம்பாட்டிலும் தீவிரமாக ஈடுபடத்தொடங்கினர். மலையகம் என்னும் சொல்லாடல் முனைப்புப் பெற்றதோடு மலையக மக்கள், மலையக இலக்கியம், மலையக கலைகள் என்னும் உணர்வு மலையகம் எங்கும் பெருக்கெடுத்தது. அவர்களின் செயற்பாடுகளால் மலையகம் எனும் எழுச்சிப் பிரவகித்துப் பெருகியது குறித்து இந்த நூலில் பேராசான் மு.நித்தியானந்தன் குறிப்பிட்டுள்ளார்.




இர.சிவலிங்கம், எஸ்.திருச்செந்தூரனின் பெரும் முயற்சியினால் அட்டன் ஹைலன்ஸ் கல்லூரியில் க.பொ.த. உயர்தர வகுப்பு 1963ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதோடு முதன்முதலாக பீ.மரியதாஸ். செ.நவரட்ண, எம்.வாமதேவன் ஆகிய மூவரும் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகினர். அவர்களில் ஒருவரே இந்நூலின் ஆசிரியர் பீ.மரியதாஸ். அக்காலப் பகுதியில் விரல்விட்டு எண்ணக்கூடிய மலையக மாணவர்களே பேராதனை மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களில் பயின்றனர். பல்கலைக்கழக வாழ்க்கையில் பீ.மரியதாஸ் தனது அறிவுப்புலத்தை விரிவாக்கிக் கொண்டதோடு இடதுசாரி சிந்தனைகளால் கவரப்பட்டு மார்க்ஸிச சிந்தனைகளிலும் தீவிரமாக இயங்கத் தொடங்கினார். பல்கலைகழகத்திலும், வெளியிலும் மார்க்சிய சிந்தனையாளர்கள் மற்றும் இடதுசாரி செயற்பாட்டாளர்களுடனும், அவருக்கு ஏற்பட்ட தொடர்புகள் தனது ஆளுமையை வளர்த்துக்கொள்ள உதவின.

1970களில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அம்மையார் தலைமையில் ஐக்கிய முன்னணி அரசு பதவியேற்ற பின்னர் அ.அஸீஸ் பாராளுமன்றத்திற்கு நியமன அங்கத்தவராக தெரிவு செய்யப்பட்டார். அக்காலத்தில் மலையக இளைஞர் முன்னணியின் செயலாளரான இர.சிவலிங்கம் மற்றும் பதுளை பாரதி இராமசாமி ஆகிய இருவரும் அ.அஸீஸ் தலைமையில் பிரதமர். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அம்மையாரைச் சந்தித்து மலையக பட்டதாரிகளின் ஆசிரிய நியமனம் தொடர்பாக கலந்துரையாடினர். அதைத் தொடர்ந்து மலையகத்தில் பதினொரு பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டது. அதில் பீ.மரியதாஸும் ஒருவர். மூன்று ஆண்டுகள் மன்னார் மாவட்ட விடத்தல்தீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றியதன் பின்னர் இடமாற்றம் பெற்று நு/இராகலை தமிழ் மகா வித்தியாலத்தில் தனது சேவையைத் தொடர்ந்தார்.

பாடசாலையில் தனது கற்பித்தல் பணிகளைவிட சமூக, இலக்கிய, அரசியல் பணிகளில் ஈடுபட்டு வந்த இவர் எழுத்துப்பணியில் அக்கறை செலுத்தவில்லை. எனினும் கடந்த நான்கு வருடங்களாக தினகரன் மற்றும் ஏனைய பத்திரிகைகளில் மலையகம் தொடர்பாக எழுதிய ஆழமான கட்டுரைகளைத் தாங்கி இந்த நூல் வெளிவருகிறது.

மலையக மக்களின் 200 வருட வரலாற்றின் துயரம் தோய்ந்த முக்கிய அம்சங்களைத் தெரிவு செய்து இக்கட்டுரைகளை எழுதியுள்ளார். மலையக மக்களின் வருகை, அவர்கள் அனுபவித்த ஆரம்ப கால ஒடுக்குமுறைகள், இனத்துவ ஆக்கிரமிப்புகள், தொழிற்சங்க வரலாறு, போராட்டங்கள், இடதுசாரித் தொழிற்சங்கச் செயற்பாடுகள், காலத்துக்குக் காலம் தோன்றிய இயக்கங்கள், 1960களில் மலையகத்தில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி, 1972இல் தோட்டங்களை அரசு பொறுப்பேற்றல் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றி இக்கட்டுரைகள் அமைந்துள்ளன.

மலையக சமூக, அரசியல் தொழிற்சங்க செயற்பாடுகளில் ஈடுபாடு, ஆழமான வாசிப்பு, மார்க்சிய சிந்தனைகள் பற்றிய தெளிவு, மலையக மக்களுக்கு எதிராக காலங்காலமாகக் செய்யப்பட்ட அநியாயங்கள் பற்றிய தார்மீக ஆவேசம், சமூக விடுதலையில் அவருக்குள்ள ஆத்மார்த்தமான வாஞ்சை ஆகியவை அவரது அனைத்துக் கட்டுரைகளிலும் பிரதிபலிக்கின்றன.



தனது கருத்துக்களுக்கும், வாதங்களுக்கும் துணையாக அவர் தனது வாசிப்பின் மூலம் பெற்றுக்கொண்ட தகவல்களையும் அறிவையும் முன்வைத்துள்ளார். மலையக மற்றும் சர்வதேச அரசியல் சமூக பொருளாதாரத் தளங்களில் அவர் பெற்றுக் கொண்ட ஆழ்ந்த அறிவும், விளக்கமும் அவரது கட்டுரைகள் அனைத்திலும் பிரதிபலிக்கின்றன.

அத்துடன் தலைவர்கள் எனப்படுவோர் மலையக சமூகத்துக்கு இழைத்த அநியாயங்கள் அவருக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளன. அவரது கட்டுரைகளைத் தொகுத்து நூலாக்கி "மலையகம் இங்கிருந்து எங்கே?" என்ற தலைப்பில் வெளியிடுவதில் கலைஒளி முத்தையா பிள்ளை அறக்கட்டளை பெருமிதமும் பெருமகிழ்ச்சியும் அடைகிறது. அத்துடன் அவர் தொடர்ந்து எழுதவேண்டும் என்னும் பணிவான வேண்டுகோளையும் அன்புடன் விடுக்கின்றோம். பீ.மரியதாஸின் நண்பரும் தற்போது லண்டனில் வசிப்பவருமான ஆர்.இராமலிங்கம் இந்த நூலுக்கு அனுசரணை வழங்கியுள்ளார். இந்த நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 28.ஆம் திகதி ஹட்டனில் நடைபெற இருக்கிறது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் கே.மெய்யநாதன் மேற்கொண்டு வருகிறார்.

எச்.எச். விக்கிரமசிங்க

# சீனாவுக்கு 10 நாள் விஜயம் செய்யும் பேருவளை பாடசாலைகளின் பழைய மாணவர்கள்

சீனாவில் நடைபெறும் 2024 Global இளைஞர் மாநாட்டில் பங்குபற்ற பேருவளையின் பல பாடசாலைகளையும் சேர்ந்த ஐந்து பழைய மாணவர்கள் 10 நாள் விஜயமொன்றை மேற்கொண்டு சீனாவுக்கு செல்கின்றனர்.

இலங்கை சீனா சமூக கலாசார நட்புறவு சங்கத்தின் (ASLCSCC) முயற்சியால் இலங்கையில் இருந்து சுமார் 30 இளைஞர்கள் இந்த மாநாட்டில் பங்கு பற்றுகின்றனர். சங்கத்தின் நிறைவேற்று குழு உறுப்பினர் இபாம் ஹனபியின் வேண்டுகோளின் பேரில் பேருவளை பகுதியைச் சேர்ந்த ஐந்து மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு சர்வதேச பாடசாலை மாணவன் அய்மன் சப்ராஸ், கொழும்பு ஸாஹிராக் கல்லூரி மற்றும் பேருவளை கோல்டன்கேட் சர்வதேச பாடசாலை பழைய மாணவனான எம்.ஏ.எம். பிலால்,கொழும்பு வாணிப முகாமைத்துவ பாடசாலை மாணவன் இஸ்மாயில் ஹாஷிம் ரிபான் ஆகியோர் (shandong) மாகாணத்திற்கும் கொழும்பு ஸாஹிரா கல்லூரி மற்றும் பேருவளை விஸ்டம் சர்வதேச பாடசாலை பழைய மாணவன் முஹம்மத் சம்ஸ் காஸிம் முஹம்மத் ருசைத், பேருவளை விஸ்டம் சர்வதேச பாடசாலை மற்றும் கொழும்பு ஸாஹிரா கல்லூரி ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவர் முஹம்மத் பர்ஸான் முஹம்மத் அஷ்மல் ஆகியோர் நின்ஸியா மாகாணத்திற்கும் விஜயம் செய்கின்றனர்.



இவர்களுள் அய்மன் சப்ராஸ், எம்.ஏ.எம்.பிலால், இஸ்மாயில் ஹாஷிம் சீனா நோக்கி பயணமாகினர். இலங்கையில் இருந்து செல்லும் 30 இளைஞர்கள் மேற்படி இளைஞர் மாநாட்டில் பங்கு பற்றுவதோடு அங்குள்ள பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள், இளைஞர் மத்திய நிலையங்கள், தலைமைத்துவ பயிற்சி வழங்கப்படும் இடங்களுக்கும் செல்லவுள்ளனர்.

இலங்கை - சீனா சமூக கலாசார நட்புறவு சங்க (ASLCSCC) தலைவர் இந்திரானந்த அபேசேகர தலைமையிலான சங்க உறுப்பினர்கள் இலங்கை - சீனா நாடுகளுக்கிடையிலான கல்வி, சமூக, வர்த்தக, கைத்தொழில், கலாசாரம் மற்றும் பொருளாதாரத் துறைகளை மேம்படுத்த பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளது. அதன் ஓர் அங்கமாகவே 30 இளைஞர்கள் இளைஞர் மாநாட்டில் பங்குபெற்றனர்.

சீனா நின்ஸியா மாகாணத்துடன் பேருவளை தொகுதியை இணைத்து எதிர்காலத்தில் பாரிய வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் நோக்குடன் ஒப்பந்தமொன்றும் கைச்சாத்திடப்பட்டது.

சீனாவுக்கு விஜயம் செய்த மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இஸ்திகார் ஜெமீல் நின்ஸியா மேயர் (Bai yuzhem) உடன் ஒப்பந்தத்திற்கான ஆவணத்தில் கைச்சாத்திட்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. 2024 global இளைஞர் மாநாட்டில் பங்கு பற்ற பேருவளை பகுதியைச் சேர்ந்த ஐந்து இளைஞர்களுக்கு சந்தர்ப்பம் பெற்றுக் கொடுத்த இலங்கை - சீனா கலாசார, சமூக நட்புறவு சங்க தலைவர் இந்திரானந்த அபேசேகர தலைமையிலான சங்க உறுப்பினர்களுக்கு பேருவளை வாழ் மக்கள் நன்றி தெரிவிக்கின்றனர்.

(பேருவளை பீ.எம்.முக்தார் )

# கல்வி அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் காத்தான்குடியில் புலமைப் பரிசில் விழா

கல்வி அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 20ஆவது வருடாந்த புலமைப் பரிசில் விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்ற மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 600 மாணவர்கள் பதக்கம் அணிவிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இதன் போது புலமைத் தாரகை எனும் நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

கல்வி அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவரும் ஓய்வு பெற்ற சுங்க அதிகாரியுமான எஸ்.எல்.மன்சூர் தலைமையில் கல்வி அபிவிருத்தி ஒன்றியத்தின் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவருமான ஏ.எல்.மீராசாகிப் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹீர் மௌலானா, கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல். ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி மற்றும் கல்வி அபிவிருத்தி ஒன்றியத்தின் நிருவாகிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





இதன்போது அதிதிகள் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டனர்.

கல்வி அபிவிருத்தி ஒன்றியத்தினால் இம்முறை நாடு பூராவும் உள்ள 2000 தமிழ் மொழி மூல பாடசாலைகளில் இருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்ற 3700 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

**எம்.எஸ்.எம்.நூர்தீன்...**
(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

# தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் செயற்பாடுகள் டிஜிட்டல் மயம்



தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக செயற்பாடுகளை டிஜிட்டல் மயமாக்கும் நடவடிக்கை ஆரம்பித்து வைக்கப்பட்டது. மேற்படி வைபவம் பத்தரமுல்லையில் உள்ள நீர்வழங்கல் அமைச்சில் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அமைச்சின் செயலாளர் ஏ.சி.எம். நபீல், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தலைவர் நிஷாந்த ரணதுங்க மற்றும் ஜெயிக்கா நிறுவனத்தின் பிரதான பிரதிநிதி யமதா டெஸ்டிதுயா கிளைமக்ஸ், இன்டநெசனல் பிறைவட் லிமிட்டெட்டின் பிரநிதிகள், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொது முகாமையாளர் ரீ. பாரதிதாசன் உட்பட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

ஜெயிக்கா மற்றும் கிளைமக்ஸ் நிறுவனத்துடன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை 2023 ஒக்டோபர் மாதத்தில் முத்தரப்பு உடன்படிக்கை ஒன்றில் டிஜிட்டல் செயற்பாட்டு மற்றும் உள்ளக செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கைச்சாத்திட்டிருந்தது.



ஆறு மாதகாலத்திற்குள் உரிய கணினி வலையமைப்பினை தயாரித்து நாடளாவிய ரீதியில் பரந்து விரிந்துள்ள வடிகாலமைப்பு சபையின் சேவை நிலையங்களிலுள்ள 2000 இற்கு அதிகமான ஊழியர்களுக்கு உரிய பயிற்சியை வழங்கி வலையமைப்பினை இயக்கும் நிலைமைக்கு கொண்டு வர முடிந்துள்ளமையே இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும்.

**அஷ்ரப் ஏ சமத்...**

# கல்முனை ஸாஹிராவில் கட்டடம் நிர்மாணிக்க அடிக்கல்நாட்டு விழா



கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையில் நிர்மாணிக்கப்படவுள்ள கேட்போர் கூடம் மற்றும் புதிய மூன்று மாடி வகுப்பறைக் கட்டடத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான, சட்டத்தரணி எச். எம். எம் ஹரீஸின் முயற்சியின் பயனாக பாடசாலையின் 75ஆம் ஆண்டு நிறைவை சிறப்பிக்கும் வகையில் கல்வி அமைச்சின் ஆறு கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் இவை நிர்மாணிக்கப்படவுள்ளன.

பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். ஜாபீர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் எச்.எம்.எம் ஹரீஸ் பிரதம அதிதியாகக்கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி வைத்தார்.

இந்நிகழ்வில் அம்பாறை அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம கௌரவ அதிதியாக கலந்து கொண்டதுடன் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹதுல் நஜீம், கல்முனை பிரதேச செயலாளர் ஜெ. லியாக்கத் அலி, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், அம்பாறை மாவட்ட செயலக பொறியியலாளர் ஏ. எம். ஸாஹீர் மற்றும் பிரதி கல்வி பணிப்பாளர்கள் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.



இந்நிகழ்வில் பாடசாலை முன்னாள் அதிபர்கள், கல்முனை, சாய்ந்தமருது கல்வி கோட்ட பாடசாலைகளின் அதிபர்கள், திணைக்கள தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர்கள், இணைப்பாளர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்கள் சங்கத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் என பலர் கலந்து கொண்டனர்.

**அஸ்ஹர் ஆதம்...**
(கல்முனை குறூப் நிருபர்)

# 'பொய்ச் சாட்சிகளால் தூக்கிலிடப்பட்ட நிரபராதி' சுல்பிகர் அலி பூட்டோ –பாகிஸ்தான் உச்சநீதிமன்றம்

"ஒருவேளை என்னை மன்னித்தால், இந்தக் கொலை தொடர்பான உண்மைகளை என்னால் வெளியே கொண்டு வர முடியும்."

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் சுல்பிகர் அலி பூட்டோவை தூக்கிலிட்டதில் முக்கிய பங்கு வகித்த, மன்னிக்கப்பட்ட சாட்சியான மசூத் மஹ்மூத் தனது அறிக்கையில் கூறிய வார்த்தைகள் இவை.

பாகிஸ்தானின் உச்சநீதிமன்றத்தில்,கடந்த திங்களன்று வெளியிடப்பட்ட 'சுல்பிகர் அலி பூட்டோ அதிபர் குறிப்பு வழக்கின்' தீர்ப்பில் 'கயமை மற்றும் பொய்ச்சாட்சியால் பாதிக்கப்பட்டவர் சுல்பிகர் அலி பூட்டோ' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

'நியாயமான விசாரணையின்றி ஒரு நிரபராதி தூக்கிலிடப்பட்டார்' என்றும், 'சுல்பிகர் பூட்டோவை தூக்கிலிடும் முடிவு ஜெனரல் ஜியாஉல்ஹக்கிற்கு நேரடியாகப் பலனளித்தது' என்றும், சுல்பிகர் அலி பூட்டோ விடுவிக்கப்பட்டிருந்தால், 'அவர் ஜியாஉல்ஹக்கிற்கு எதிராக ஒரு தேசத்துரோக வழக்கைத் தொடங்கியிருக்கலாம்' என்றும் உச்சநீதிமன்றத் தீர்ப்பு கூறியது.

இந்தத் தீர்ப்பில், ஃபெடரல் பாதுகாப்புப் படையின் (எஃப்எஸ்எஃப் FSF) அப்போதைய தலைமை அதிகாரி மசூத் மஹ்மூத்தின் அறிக்கை மற்றும் அவரது முக்கிய பங்கு குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது.

ஃபெடரல் பாதுகாப்புப் படை, அதாவது எஃப்எஸ்எஃப் என்பது சுல்பிகர் அலி பூட்டோவால் உருவாக்கப்பட்ட ஒரு துணை இராணுவப் படை.

பூட்டோ தூக்கிலிடப்பட்ட வழக்கில் வாதியாக இருந்த, அரசியல் தலைவர் அகமத் ரசா கசூரியை பூட்டோவின் உத்தரவின் பேரில் கொல்லச் சதி செய்ததாக எஃப்எஸ்எஃப் அமைப்பு மீது குற்றம் சாட்டப்பட்டது.

ஆனால் நவம்பர் 11, 1975 அன்று அகமத் ரசா கசூரியை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் அவரது தந்தை முகமது அகமத் கான் கசூரி கொல்லப்பட்டார். இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில், எஃப்எஸ்எஃப் தலைமை அதிகாரி மசூத் மஹ்மூத் முக்கியமானவர்.

இராணுவப் புரட்சிக்குப் பிறகு மசூத் மஹ்மூத் கைது செய்யப்பட்டார். முதலில், அவர் குற்றவாளி என அறிவிக்கப்பட்டார். செப்டம்பர் 7, 1977இல், லாகூர் மாவட்ட மாஜிஸ்திரேட் குற்றம் சாட்டப்பட்ட மசூத் மஹ்மூத்திடம் இருந்து ஒரு கடிதத்தைப் பெற்றார்.

ஒரு வாரத்திற்குப் பிறகு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அவரது வாக்குமூலம் 1979இல் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் சுல்பிகர் அலி பூட்டோவை தூக்கிலிடுவதற்கான அடிப்படையாக அமைந்தது.



மசூத் மஹ்மூத் தனது அறிக்கையில், சுல்பிகர் அலி பூட்டோ தன்னிடம் அகமது ரசா கசூரியை கொல்ல உத்தரவிட்டதாகவும், "எனக்கு கசூரியின் இறந்த அல்லது காயப்பட்ட உடல் வேண்டும்" என்று கூறியதாகவும் தெரிவித்தார்.

ஆனால் மசூத் மஹ்மூத்துக்கு ஏன் திடீரென்று மனமாற்றம் வந்தது என்றால், அவரது கூற்றின்படி, 'இந்தக் கொடூரமான குற்றத்திற்கு உத்தரவிட்டதால், தனக்கு மனசாட்சி கடுமையாக உறுத்தியது.'

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பில், "மசூத் சிறையில் இருந்தபோது அவருக்கு குற்றவுணர்வு தோன்றியது. அந்த நேரத்தில் அவரது மனசாட்சி அமைதியாக இருந்தது. ஆனால் அவர் கைது செய்யப்பட்டவுடன் அது உறுத்தியது," என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடிதம் எழுதப்பட்டு ஒரு வாரத்திற்குப் பிறகு, மசூத் மஹ்மூத்தின் கோரிக்கை ஏற்கப்பட்டு, அன்றே அவரது வாக்குமூலமும் பதிவு செய்யப்பட்டது.

நீதிமன்றத் தீர்ப்பின்படி, "அக்கால நீதிமன்றங்களால் மசூத் மஹ்மூத்தின் நற்பெயரில் எந்தச் சந்தேகமும் தெரிவிக்கப்படவில்லை."

மசூத் மஹ்மூத் தனது மனசாட்சியைப் பற்றிப் பலமுறை பேசியதாகவும், "அவரது மனசாட்சி அவரை மிகவும் குற்றவாளியாகக் கருதியது" என்றும், "இந்தச் செயல் (கொலை) எனது மனசாட்சிக்கு எதிரானது" என்றும் அவர் தெரிவித்ததாக நீதிமன்றம் கூறியது.

ஆனால் அவர் சிறையில் சிறிது காலம் கழிக்க வேண்டியிருந்த போதுதான் அவரது மனசாட்சி விழித்துக்கொண்டது. அந்த மனசாட்சி முதலில் தனக்காக மன்னிப்பு கேட்டு இந்த குற்றவுணர்வில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டது.

இந்தச் சூழ்நிலையில் தனக்கான பாதுகாப்பும் வசதியும், தனது மனசாட்சியைவிட அவருக்கு முக்கியமாகத் தோன்றியுள்ளது. அப்படியிருக்க அவர் உண்மையைச் சொல்கிறாரா அல்லது சந்தர்ப்பவாதியா என்ற கேள்வி எழுவதாகவும் நீதிமன்றம் கூறுகிறது.

மசூத் மஹ்மூத் தொடர்பான விவாதத்தை முடித்துக்கொண்ட நீதிமன்றம், "அவர் தனது அறிக்கையில் வியத்தகு முறையில் கருத்துகளை முன்வைத்தார், ஆனால் 'ஒரு நபரைக் கொல்வது என்பது முழு மனிதகுலத்தையும் கொல்வது' என்பதை அவர் மறந்துவிட்டார்" எனக் கூறியது.

நீதிமன்றத் தீர்ப்பின்படி, மசூத் மஹ்மூத் மற்றும் மியான் முகமது அப்பாஸ் ஆகியோரது சாட்சியங்களின் அடிப்படையில் அரசுத் தரப்பு தனது முழு வழக்கையும் கட்டமைத்தது. ஆனால் மியான் முகமது அப்பாஸ் தனது சாட்சியத்தை வாபஸ் பெற்று, அதற்கு அப்படியே எதிரான ஓர் அறிக்கையை அளித்தார்.

இந்தக் காலத்தில் ஹக் நவாஸ் தவானாவும், அப்துல் ஹமீத் பஜ்வாவும் இறந்துவிட்டனர். எம்.ஆர். வெல்ச் மற்றும் சயீத் அகமது கான் ஆகியோரை மன்னிப்பு கோரும் சாட்சிகளாக ஆக்காமல் அரசுத் தரப்பு சாட்சிகளாக ஆஜர்படுத்தினர்.

(நன்றி: பி.பி.சி)

## 'பாபி', 'சமித்புர சத்து'...

02பேரும் அந்நாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் நேற்று (12) அதிகாலை குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் 04 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் குழுவினால் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

நுகேகொடை பிரதேசத்தை சேர்ந்த "பாபி" என்றழைக்கப்படும் 48 வயதான தினேஷ் சமந்த டி சில்வா மற்றும் மட்டக்குளி, சமித்புர பிரதேசத்தை சேர்ந்த "சமித்புர சத்து என்றழைக்கப்படும் 26 வயதான கங்கனம்லாகே திமுத்து சதுரங்க பெரேரா என்ற இருவருமே இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக இலங்கை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் நான்கு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் குழு சந்தேக நபர்களை டுபாயில் இருந்து நாட்டுக்கு அழைத்து வந்துள்ளது.

'சமித்புர சத்து' கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் (CCD) ஒப்படைக்கப்பட உள்ளதாகவும், 'பாபி' கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை 05.10 மணியளவில் டுபாயிலிருந்து வந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமான UL226 மூலம் இருவரும் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

## பாராளுமன்ற சிறப்புரிமை...

சபாநாயகரைக் கேட்டுக் கொண்டார். ஊடக நிறுவனம் ஒன்றின் பிரதானி என்பதற்காக அவர் ஜனாதிபதியாக முடியாது. அவர் தொலைக்காட்சி நிறுவனத்துக்கு அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொண்ட விதத்தை நான் வெளியிட வேண்டி வரும் என்றும் அமைச்சர் சுசில் சபையில் தெரிவித்தார். தனியார் தொலைக்காட்சியை பாராளுமன்ற சிறப்புரிமை மற்றும் ஒழுக்கவியல் குழுவுக்கு அழைத்து விசாரணை நடத்துமாறும் அமைச்சர் கேட்டுக் கொண்டார். பாராளுமன்றத்தில் நேற்று சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

ஒரு தனியார் தொலைக்காட்சியின் காலை நேர நிகழ்ச்சியில் நேற்று சபையில் நான் குறிப்பிடாத பல விடயங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த நிறுவனத்தின் பிரதானி ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடவுள்ளதால் என் மீது போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முடியாது. கல்வி அமைச்சராக நான் செய்தது ஒன்றுமில்லையென இந்த நிகழ்ச்சியின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது. நெருக்கடியான சூழ்நிலையில் தான் நான் கல்வி அமைச்சராக பதவியேற்றேன்.

யுத்த காலத்தில் கூட பரீட்சைகள் முறையாக நடத்துவதற்கு ஒத்துழைப்புக்களை வழங்கியதுடன் யுத்த காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பரீட்சைகள் முறையாக நடத்தப்பட உரிய நடவடிக்கைகளை எடுத்தேன் 2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியின் போது கல்வி அமைச்சராக பதவியேற்றேன். பல்வேறு தரப்பினரது ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொண்டு மாணவர்களுக்கு சீருடைகளையும், பாடப்புத்தகங்களையும் பெற்றுக் கொடுத்துள்ளேன். கல்வி அமைச்சராக நான் என்ன செய்தேன் என்பதற்கு பாடசாலை மாணவர்கள் பதிலளிப்பார்கள்.

இந்த தொலைக்காட்சி நிறுவனத்தின் பிரதானி ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மஹிந்த புயலை மீண்டும் புதுப்பிப்பதாக இவர்கள் குறிப்பிட்டு வருகிறார்கள். ஜனாதிபதி தேர்தலுக்காக காலையில் கூட்டணியமைத்தார்கள் மாலை அவரது கட்சியின் தலைவர் பதவி விலகினார்.இவ்வாறு தான் இவர்களின் அரசியல் நிலைமை காணப்படுகிறது. அவரது அரசியல் பிரசாரத்துக்காக எம்மை விமர்சிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த தனியார் நிறுவனம் கடந்த காலங்களில் எவ்வாறு அரச தலைவருக்கு இழுக்கு ஏற்படுத்தியது என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். இந்த நிறுவனத்தை சிறப்புரிமை குழுவுக்கு அளிப்பது அவசியம் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## யுனெஸ்கோ பணிப்பாளர் நாயகம்...

19 வரை இலங்கை வரவுள்ளார். இந்த விஜயத்தின் போது, பணிப்பாளர் நாயகம் Audrey Azoulay ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்கவுள்ளதுடன், கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் பதில் வெளிவிவகார அமைச்சர் தாரக பாலசூரிய ஆகியோரை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

தாமரைத் தடாக அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள யுனெஸ்கோவில் இலங்கை அங்கத்துவம் பெற்றதன் 75ஆவது ஆண்டு விழாக் கொண்டாட்டத்தில் பங்கேற்பதுடன் இலங்கையில் யுனெஸ்கோவினால் அங்கீகரிக்கப்பட்ட உலக பாரம்பரிய தளங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

## மலேசிய பாதுகாப்பு அமைச்சருடன்...

*மலேசியாவுக்கும் இலங்கைக்குமான உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டது. இச்சந்திப்பின் போது பாராளுமன்ற உறுப்பினர் டத்தோஸ்ரீ சரவணன் முருகன் மற்றும் மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.*

## அரச காணிகளுக்கு...

வீரர்களுக்கும் 100 ரூபா என்ற பெயரளவு வரித் தொகையின் கீழ் விசேட குத்தகையை வழங்குதல்.

2. குத்தகைக்கு வழங்கப்பட்ட காணிகளின் அபிவிருத்திக்கான நிதி வசதிகளைப் பெறுவதற்கு வசதியாக, சிறப்பு குத்தகைகளின் நிபந்தனைகளை தளர்த்துதல்,

3. அபிவிருத்தி செய்து வரும் /அபிவிருத்தி செய்துள்ள காணிக்கு சான்றிதழ்களை இலவசமாக வழங்குதல்,

4. நடுத்தர வர்க்கத்தின் கொள்முதல் விலைப் பிரிவின் கீழ் தகுதியுள்ள வதிவிட அடிப்படையில் அபிவிருத்தி செய்துள்ள நிலத்திற்கு சான்றிதழ்களை இலவசமாக வழங்குதல்,

5. நிபந்தனைகளுடன் சிறப்பு சலுகைக் கடிதத்தின் விதிகளின்படி நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் திரும்பப் பெறுதல் ஆகியவற்றை முறையாகப் பதிவு செய்தல்.

6. நிலஅளவை தொடர்பான அமைப்பு மற்றும் வரைபடங்களைப் பெறுவதற்கு நில அளவை திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய அளவீட்டுக் கட்டணத்திலிருந்து விலக்களித்தல்.

அனைத்துப் பிரிவு பாதுகாப்புத் தரப்பினருக்கும் சிக்கலற்ற காணியின் உரிமையை வழங்கும் இந்த தேசிய வேலைத்திட்டம் 04 மாதங்களில் பூர்த்தி செய்யப்படவுள்ளது. இது தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினருக்கு அறிவித்து அவர்களின் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வுகளை வழங்குவதற்காக நிபந்தனையின்றி முழு உரிமையுள்ள காணி உறுதிப் பத்திரங்களை வழங்குவதற்காக நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 04 இடங்களில் ஜனாதிபதி அலுவலகத்தின் தலைமையில் நடமாடும் சேவைகளை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, பொலன்னறுவை மாவட்ட நடமாடும் நிகழ்ச்சி 10072024 அன்று ஹிங்குராக்கொடை விமானப்படைத் தலைமையகத்தில் நடைபெற்றதுடன், 17072024 ஆம் திகதி, சாலியபுர கஜபா படைப்பிரிவு நிலையத்திலும், 19072024 ஆம் திகதி குருநாகல் விஜயபா படைப்பிரிவு நிலையத்திலும், 23072024 ஆம் திகதி களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியிலும் இந்த நடமாடும் சேவைகள் நடைபெறவுள்ளன.

## நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவின் மாமனார் காலமானார்



*நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவின் மனைவி. திருமதி பீ.டி. மஹகுமாரகே சேமசிங்ஹ மற்றும் திருமதி திலினி மஹகுமாரகே திருமதி ஷெருகா மஹகுமாரகே ஆகியோரின் தந்தையும் மறைந்த பத்மா கஹபிட்டியவின் கணவருமான மஹகுமாரகே அபேசிங்க காலமானார்.*

*அன்னாரது பூதவுடல் களுபோவில மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளதுடன் இறுதி கிரிகைகள் நாளை (14) மத்துகம பொது மயானத்தில் நடைபெறவுள்ளது.*

## அச்சுறுத்தல் ...

அழைப்பொன்று வந்துள்ளதையடுத்து பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அத்துருகிரிய துப்பாக்கிச் சூட்டை நடத்திய சந்தேகநபர்கள் கடல் வழியாக இந்தியாவுக்குத் தப்பிச் செல்ல முற்படலாமென புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மன்னாரில் விசேட சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் நாட்டை விட்டு தப்பிச் செல்வதைத் தடுக்க விமான நிலையங்கள் மற்றும் பிற இடங்களுக்கான பாதுகாப்புகளையும் பலப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், மன்னாரூடாக தப்பிச் செல்லும் அபாயம் அதிகரித்திருப்பதன் காரணமாக பல விசேட சோதனைச் சாவடிகள் மற்றும் வீதித் தடைகள் அமைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

## ஆசிரியர்கள்...

நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர்,

ஆசிரியர்களுக்கு மற்றவர்களை விட அவர்களுக்கு அதிக பொறுப்புகள் உள்ளன. எனவே, தங்கள் மனசாட்சிப்படி செயல்பட வேண்டும். ஆனால், இந்தப் பணிப்பகிஷ்கரிப்புகள் தொடர்ந்தால் தொழிற்சங்கங்கள் பெரும் பாதிப்பை சந்திக்க நேரிடும் என்பதை அவர்கள் தற்போது உணர்ந்துள்ளனர். எனவே, அவர்கள் வெவ்வேறு கதைகளைக் கூறினாலும், அவர்கள் எடுத்த அனைத்து நடவடிக்கைகளும் தற்போது தோல்வியடைந்துள்ளன என்றும் இராஜாங்க அமைச்சர் அவிந்தகுமார் தெரிவித்தார்.

## விசா இன்றி...

*இந்திய பிரஜைகளே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*இதேவேளை சுங்கவரி செலுத்தாமல் சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 1,000 சிகரெட்டுகள் அடங்கிய 50 சிகரெட்டு கார்ட்டுன்களுடன் இந்திய பிரஜை ஒருவரும் (11) கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*

## ஜனாதிபதி ...

தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் அதன் உறுப்பினர்கள், பாராளுமன்ற பொதுச் செயலாளர் மற்றும் சட்ட மாஅதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## அரச உர நிறுவனங்கள்...

என்ற பெயரில் ஒன்றிணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை இரண்டு தலைவர்கள், இரண்டு பணிப்பாளர்கள் சபை மற்றும் இரண்டு நிர்வாக பணியாளர்கள் என்ற ரீதியில் நடத்தப்பட்டுவந்த இரு நிறுவனங்களையும் இணைப்பதன் மூலம் பெரும் தொகை பணத்தை சேமிக்க முடிந்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. அரசாங்கத்திற்குச் சொந்தமான இரண்டு உர நிறுவனங்களையும் இணைத்து புதிய பெயரை அறிமுகப்படுத்தும் நிகழ்வு கொழும்பில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றிய விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர, இவ்விரு நிறுவனங்களின் ஊழியர்களான 400 பேரில் 273 பேர் விருப்ப ஓய்வு பெற்றுள்ளனர். அரச ஊழியர்களுக்கு இதுவரை வழங்கப்படாத விருப்ப ஓய்வுக்கான அதிகூடிய நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். சேவை காலம் மற்றும் பதவிகளின் அடிப்படையில் 9 இலட்சம் ரூபா தொடக்கம் பெருந்தொகை இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர மேலும் தெரிவித்தார்.

## யாழ். குடாநாட்டின் வாழ்க்கை...

அடிப்படையில் நாம் இன்று இருக்கும் இடத்தைப் பற்றிய சில கருத்துக்களைப் பெறவும் இங்கு வருகைதர கிடைத்தமையை பாக்கியமாக கருதுகிறேன்.

சேவைகள் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு ஜனாதிபதியும் அரசாங்கமும் உறுதிபூண்டுள்ளனர். எனவே, அபிவிருத்திக்குத் தேவையான அபிவிருத்தி உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவது இந்தப் பிரதேசத்துக்கு மிகவும் முக்கியமானது.

அண்மையில், மாகாண அமைச்சினால் பரீட்சைகள் மற்றும் தகுதிகளின் அடிப்படையில் கிராம உத்தியோகத்தர் வெற்றிடங்களை நிரப்பும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நாங்கள் தலையிடவில்லை. அதனால் நேர்முகத்தேர்வில் தேர்ச்சி பெற்று நியமனம் பெற்ற சிலர் வேறு பணிகளுக்கு செல்ல முடிவு செய்தனர். அதனால், வெற்றிடங்கள் அதிகரித்து வருகின்றன. எனவே நாங்கள் அதே நடைமுறையை அவ்வாறே பின்பற்றுகிறோம். நாங்கள் தாமதிக்க தேவையில்லை. அமைச்சின் செயலாளர் இங்கே இருக்கிறார் என்று நினைக்கிறேன். இதைப் பற்றி கலந்துரையாடி எப்படி முன்னோக்கிச் செல்லலாம் என்று பார்ப்போம். ஏனைய வெற்றிடங்களைப் பொறுத்தமட்டில், குறிப்பாக உருமய வேலைத் திட்டத்துக்கு, தற்காலிக நியமனங்களை வழங்குவதற்கு உருமய வேலைத்திட்டத்தில் ஏற்பாடுகள் உள்ளன. எனவே இந்த விவகாரம் தீர்க்கப்படலாம். விவசாயிகளின் முயற்சிகளை நாம் பாராட்டுகிறோம். அனைத்து விவசாயிகளும் தனியார் துறையில், உரிமைகளின் அடிப்படையில் அல்லது சிறு விவசாயிகள் என்ற வகையில் அவர்கள் தேசிய பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு தனிப்பட்ட பங்களிப்பாளர்களாக உள்ளனர் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. பாடசாலை பிள்ளைகளும் நான் கவனம் செலுத்த விரும்பும் மற்றொரு பிரிவினராக கருதுகிறேன். ஜனாதிபதியும் அரசாங்கமும் கல்விக்கு அதிகூடிய முன்னுரிமையை வழங்குவதற்கு முழுமையாக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். ஒவ்வொரு பிள்ளைக்கும் கல்வியைப் பெறுவதற்கும் பல்கலைக்கழகத்துக்குச் செல்வதற்கும், பின்னர் புதிய நிகழ்ச்சித்திட்டங்கள், தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் துறைகளில் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பைப் பெற வேண்டும். அதற்கான வரவு,செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், நாம் அனைவரும் ஒன்றிணைந்து இலக்குகளை அடைய முயற்சிக்க வேண்டும். வறுமை நிலை திருப்திகரமாக நிர்வகிக்கப்பட்டுள்ளதுடன், வறுமை நிலையில் உள்ளவர்களை பராமரிக்கின்ற விடயத்தில் நாம் அனைவரும் முயற்சி செய்கிறோம் என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். எந்தவொரு பொருளாதாரத்திலும், எந்த நாட்டிலும் வறுமை ஒரு முக்கிய பிரச்சினை என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள். செல்வந்த நாடான அமெரிக்காவில் உணவு முத்திரைகள் வழங்கப்படுகின்றன. எனவே, உலகின் அனைத்துப் பொருளாதாரங்களும் வறியவர்கள் தொடர்பில் இக்கட்டான சூழலை எதிர்கொண்டுள்ளதால், வடமாகாணத்தின் இந்த தொலைதூரக் கிராமங்களில் வறுமை நிலையில் உள்ள மக்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ், பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன், அங்கஜன் ராமநாதன், சி. விக்னேஸ்வரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், யதாமினி குணவர்தன, பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன, மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் மற்றும் அனைத்து அரச நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## 2,600 மில்லியன் டொலர்...

வலுவூட்டும் வகையில் புதிய முதலீடுகள் ஸ்தாபிக்கப்படும் எனவும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

பிங்கிரிய ஏற்றமதி வலயம் முழுமைபடுத்தப்பட்டதன் பின்னர் 2600 மில்லியன் டொலர் வருமானத்தை ஈட்டிக்கொள்ள எதிர்பார்ப்பதோடு, 75,000 புதிய வேலைவாய்ப்புக்களும் உருவாக்கப்படவுள்ளது.

இதன்போது பிங்கிரிய ஏற்றுமதி வலயத்தின் நிர்மாண பணிகளை முன்னெடுக்கும் Dongxia Industrial & Commerce Co.Ltd. நிறுவனத்தின் அலுவலகத்தை திறந்து வைத்த ஜனாதிபதி, நிறுவன வளாகத்தை மேற்பார்வை செய்ததோடு, ஊழியர்களுடனும் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

அதனையடுத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முதலீட்டுச் சபையின் அதிகாரிகள், நகர அபிவிருத்தி சபையின் அதிகாரிகள், முதலீட்டாளர்கள், தொழில் உரிமையாளர்களுக்கு இடையிலான சந்திப்பொன்றும் இடம்பெற்றதோடு, இந்த செயலாக்க வலயத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டதன் பின்னர் பிங்கிரிய, தும்முல்லசூரிய, மாதம்பை உள்ளிட்ட பிரதேசங்களை மாநகர தரத்திற்கு மேம்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுரை விடுத்தார்.

விவசாயம், உற்பத்தித் தொழிற்சாலைகள், தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா, மீன்பிடி உள்ளிட்ட ஐந்து துறைகளின் கீழ் பிங்கிரியவை பொருளாதார வலயமாக மாற்றுவது குறித்தும் இதன்போது ஆலோசிக்கப்பட்டது.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"டொங்ஷியா நிறுவனம் 2018 இலங்கையில் வர்த்தகச் செயற்பாடுகளை ஆரம்பித்தது. வங்குரோத்து அடைந்த பின்னரும் நாட்டிலிருந்து புதிய தொழிற்சாலையை ஆரம்பித்துள்ளது. அதனால் 400 பேருக்கு வேலைவாய்ப்பை வழங்க முடிந்துள்ளது. இந்த தொழிற்சாலை இளையோருக்கு சிறந்த எதிர்காலத்தை தோற்றுவிக்கும். நாட்டில் இது போன்ற பல தொழிற்சாலைகள் உருவாக வேண்டும்.

பிங்கிரிய பிரதேசத்தை முதலீட்டு வலயமாக அபிவிருத்தி செய்து நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும். அதற்காகவே 2018 ஆம் ஆண்டில் பிங்கிரிய பொருளாதார வலயத்தை ஆரம்பித்தோம். இன்று மேலும் 1000 ஏக்கர்களை இந்த வலயத்தோடு இணைத்திருக்கிறோம்.

நாம் மிகக் கஷ்டமான காலத்தை கடந்து வந்திருக்கிறோம். நாட்டின் பொருளாதாரம் சரிவடைந்த வேளையில் நாட்டை ஏற்றுக் கொள்ள எவரும் வரவில்லை. பாராளுமன்றத்தில் ஒரு ஆசனத்தை கொண்டிருந்த கட்சிக்கு ஜனாதிபதி பதவியை வழங்க வேண்டிய நிலைமை வந்தது.

உலகில் எங்கும் அவ்வாறு நடந்ததில்லை. இன்றளவில் இலங்கை வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு வந்திருக்கிறது.

கடன் மறுசீரமைப்பினால் மீளச் செலுத்த வேண்டியிருந்த கடன் தொகையில் 8 பில்லியன் டொலர் நிவாரணம் கிடைத்திருக்கிறது. கடன் செலுத்துவதற்கான காலத்தையும் 2043 வரையில் நீடித்துள்ளோம். அதனால் நாட்டின் பொருளாதாரம் மூச்சு விடும் நிலைமையை அரசாங்கம் உருவாக்கியுள்ளது. இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லாவிட்டால் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் சரிவடையலாம். எமது ஏற்றுமதி வருமானத்தைவிட இறக்குமதி செலவு அதிகமாக உள்ளது. இவ்வாறு முன்னோக்கிச் சென்றால் இன்னும் பதினைந்து வருடங்களில் மீண்டும் வங்குரோத்து நிலைவரும்.

அதனால் வெளிநாட்டு கடன்களை முகாமைத்துவம் செய்து சிறந்த பொருளாதார முறைமையை பேண வேண்டும். வியட்நாம், தாய்லாந்து, இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகள் ஏற்றுமதி பொருளாதாரத்தினால் முன்னேறியுள்ளன. இலங்கை இன்னும் ஒரே இடத்தில் நிற்கிறது.

அதனால் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை பாதுகாத்துகொண்டு நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும். ஏற்றுமதி பொருளாதாரத்தை பலப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்று திறக்கப்பட்ட பொருளாதார வலயம் ஏற்றுமதி பொருளாதாரத்துக்கு சிறந்த முன்னுதாரணமாகும்.

ஏற்றுமதி பொருளாதாரம், உற்பத்தித் துறைகள், சுற்றுலா, தொழில்நுட்பம், நவீன விவசாயம் உள்ளிட்ட துறைகளின் ஊடாக வலுவான பொருளாதாரத்தை ஏற்படுத்த முடியும். அதற்குத் தேவையான அடித்தளத்தை அரசாங்கம் இட்டுள்ளது. இந்த வேலைத் திட்டங்களைப் பாதுகாப்பதால் எதிர்காலம் சிறப்பானதாக அமையும்.

ஏற்றுமதி துறையை ஊக்குவிப்பதற்கான 2018 ஆம் ஆண்டில் பிங்கிரிய ஏற்றுமதி வலயம் உருவாக்கப்பட்டது. அதனால் குளியாபிட்டிய, தும்முல்லசூரிய, மாதம்பை, பிங்கிரிய, சிலாபம் உள்ளிட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்ய முடியும். இந்த பொருளாதார வலயத்தை முழுமைப்படுத்தும் பட்சத்தில் 75,000 தொழில் வாய்ப்புக்களும் உருவாகும்.

அதேபோல் இரணவில, பிங்கிரிய, சிலாபம் வரையில் சுற்றுலா வலயமொன்றும் அமைக்கப்படவுள்ளது. இரணவில பிரதேசத்தில் கோல்ப் விளையாட்டு மைதானம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. அதேபோல் IT வலயமொன்றைக் கட்டமைக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சிலாபம் பெருந்தோட்ட நிறுவனங்களின் தோட்டங்களை நவீன விவசாயத்துக்காக பயன்படுத்திகொள்ள எதிர்பார்க்கிறோம்.

இந்த ஏற்றுமதி வலயம் மேம்படுத்தப்பட்ட பின்னர் புதிய வீடுகள், நகரங்கள் மற்றும் பிரதேச மக்களுக்கான வர்த்தக வாய்ப்புக்களும் உருவாகும்.

அதன்படி விவசாயம், தொழில்துறை, உற்பத்தி, தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா வர்த்தகம், மீன்பிடித்துறை ஆகியவற்றை மேம்படுத்துவதன் ஊடாக பிங்கிரியவை இந்நாட்டின் பிரதான பொருளாதார வலயமாக மாற்றியமைக்க எதிர்பார்ப்பதோடு, இதற்கு இணையாக பன்னல, குளியாபிட்டிய பகுதிகளிலும் பாரிய அபிவிருத்தி ஏற்படும். இதனால் மாதம்பை பகுதியில் முற்காலத்தில் காணப்பட்ட செழிப்பை மீண்டும் ஏற்படுத்த முடியும்.

இந்த அனைத்து வேலைத்திட்டங்களும் நாட்டின் முன்னேற்றத்துக்காகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நாம் இப்போது கஷ்டமான காலத்தை கடந்து வந்திருக்கிறோம். அதிலிருந்து படிப்படியாக முன்னேறி வந்திருக்கிறோம். மக்களின் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் உள்ளன. அவற்றை தீர்க்க சரியான பொருளாதார முறையுடன் பயணிக்க வேண்டும்.

அதனை சாத்தியமாக்கிக் கொள்ள நாட்டுக்குள் புதிய பொருளாதார மாற்றம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். அந்த மாற்றத்துக்கான சிறப்பிடமாக பிங்கிரியவை குறிப்பிடலாம். பிங்கிரிய, இரணவில உள்ளிட்ட பகுதிகளில் புதிய பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும். நீங்கள் அனைவரும் அதன் பங்குதாரர்கள் ஆக வேண்டும்." என்று ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

## இன்றைய பலன்கள் (13.07.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம் :**
இல்லத்தில் சுப காரியங்களை நடத்துவது தொடர்பான முயற்சிகள் நல்ல விருப்பத்தை சந்திக்கும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

**ரிஷபம் :**
கூட்டுத் தொழிலில் பணியாளர்களின் ஒத்துழைப்பினால் தொழில் முன்னேற்றம் உண்டாகும். போட்டிகளை எதிர் கொண்டு வெற்றி அடைவீர்கள்.

**மிதுனம் :**
கூட்டுத் தொழில் நன்றாக நடைபெறும். கூட்டாளிகளின் ஆலோசனைப்படி புதிய தொழில் தொடங்க முயற்சிப்பீர்கள்.

**கடகம் :**
வாடிக்கையாளர்களால் வசந்த காலத்தை நோக்கி முன்னேறுவீர்கள். கூட்டுத் தொழிலில் கூடுதல் ஆதாயம் கிடைக்கும்.

**சிம்மம் :**
நிர்வாகத்தில் அசோகரியம் ஏற்படலாம். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகள் தோன்றி மறையும். சிறிய கடன் தொல்லைகள் தலை தூக்கும்.

**கன்னி :**
கொடுக்கல் வாங்கலில் சற்று கவனம் தேவை. சிறிய வார்த்தைகளும் மனவருத்தங்களை உண்டாக்க கூடும். குடும்பத்தில் பணத்தொகை அதிகரிக்கும்.

**துலாம் :**
அக்கம் பக்கத்தினரிடம் குடும்ப விஷயங்களைப் பற்றி பேசாமல் இருப்பது நல்லது. முயற்சித்த சில செயல்களில் தடை தாமதங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம் :**
முடிவுகளில் நிதானத்தை கடைபிடிப்பது அவசியம். குடும்பத்தில் செலவுகள் இருந்தாலும் மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது.

**தனுசு :**
புதிய கிளைகளைத் தொடங்க சிறிது காலம் காத்திருப்பது நல்லது. குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகள் தோன்றுக்கூடும். கடன் காரர்களின் மறைமுகத் தொல்லை இருக்கும் .

**மகரம் :**
கூட்டாளிகளில் ஒருவர் மனம் வேறுபாடு காரணமாக பிரிந்து செல்ல நேரலாம். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்காமல் போகக்கூடும்.

**கும்பம் :**
கூட்டுத் தொழில் சில சிரமங்களோடு நடைபெறும். கூட்டாளிகளுக்குள் கருத்து வேறுபாடுகள் உண்டாகக்கூடும். குடும்பத்தில் எதிர்பாராத சிறு சிறு பிரச்சனைகள் தலை தூக்கினாலும் சமாளிப்பீர்கள்.

**மீனம் :**
கூட்டுத் தொழிலில் போட்டிகள் உருவாகலாம். பணியாளர்களை கண்காணித்து ஆலோசனை கூறுவீர்கள். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சனைகள் ஏற்பட்டாலும் அவற்றை சமாளித்து விடுவீர்கள்.

# கெஹலிய உட்பட 7 பேருக்கு தொடர்ந்து விளக்கமறியல்

*தரமற்ற மருந்து கொள்வனவு தொடர்பில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் 7 சந்தேக நபர்கள் நேற்று (12) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதனையடுத்து சந்தேக நபர்களை இம்மாதம் 25 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.*

## மரண தண்டனை .... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அது அந்த சம்பந்தப்பட்ட நபருக்கு இழைக்கப்படும் அநீதியாகும்.இவ்வாறான நிலையில் சிறைச்சாலைகள் அலுவல்கள் அமைச்சர் என்ற வகையில் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கமைய சிறைச்சாலை கட்டளைச் சட்டத்தில் 40 மற்றும் 80 என்ற உறுப்புரைகளை திருத்தம் செய்யும் பரிந்துரைகளை அமைச்சரவைக்கு முன்வைத்துள்ளேன்.

அதனடிப்படையில் முதற்கட்டமாக மரண தண்டனை மற்றும் ஆயுள் தண்டனை கைதிகளை தவிர்த்து 20 ஆண்டுகாலம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிக்கு அவரது நன்னடத்தையை அடிப்படையாகக் கொண்டு தண்டனைக் காலத்தை 13 ஆண்டுகளாக வரையறுக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. சிறைச்சாலைக் கட்டளைச்சட்டத்தில் சிறப்பு விடயதானங்களுக்கு அமைய மரண தண்டனை அனுபவிக்கும் கைதி ஐந்து வருடங்கள் சிறையில் இருக்கும் போது அவரது உளவியல் முழுமையாக பாதிக்கப்படும். ஆகவே மரணதண்டனை மற்றும் ஆயுள் தண்டனைக் கைதிகளுக்கு விசேட சலுகை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டு மரண தண்டனை மற்றும் ஆயுள் தண்டனையை அனுபவிக்கும் நபர்கள் இந்த பரிந்துரைக்குள் உள்ளடங்க மாட்டார்கள் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## தடயவியல் கணக்காய்வு ... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

போட்டித்தன்மையான விலை மனு கோரலுக்கு சென்றிருந்தால் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் சிறந்த தீர்மானத்தை மேற்கொண்டு இருக்க முடியும். அத்துடன் விசா கட்டணம் தொடர்பில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றன.ஒரு இடத்தில் 18.5 டொலர் என்றும் பிறிதொரு இடத்தில் 7.2 டொலர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் இந்த செயற்திட்டம் 200 மில்லியன் டொலர் முதலீடு என்று அமைச்சரவை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டது,ஆனால் முன்னெடுத்த அவதானிப்புக்களில் 200 மில்லியன் ரூபா என்று கூட அது குறிப்பிடப்படவில்லை. தரவுக் கட்டமைப்பின் இரகசியத்தன்மையை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கே உள்ளது.தரவுக் கட்டமைப்பின் இரகசியத் தன்மையை பாதுகாக்க வேண்டியதன் அவசியம் தொடர்பில் குழு வலியுறுத்தியுள்ளது. கணக்காய்வு தலைமை அதிபதியினால் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தரவுகளை அடிப்படையாகக் கொண்டு விலை மனுக்கோரலை முழுமையாக தடயவியல் கணக்காய்வுக்கு உட்படுத்துமாறு பரிந்துரைத்துள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதி தேர்தலை ... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் ஆணைக்குழுவிற்கு தற்போது சட்ட ரீதியாகவோ அல்லது நிதி ரீதியாகவோ எந்த தடையும் இல்லை என்பதை அவர் மீண்டும் வலியுறுத்தியதுடன் ஜூலை 14ஆம் திகதிக்கு பின்னர் ஜனாதிபதி தேர்தல் குறித்த அறிவிப்பை விடுக்க தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளதாகவும் தெரிவித்தார்.

செப்டம்பர் 17 மற்றும் அக்டோபர் 17 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ஒரு நாளில் வாக்குப்பதிவுக்கான அறிவிப்பை இந்த மாத இறுதியில் எதிர்பார்க்க முடியும்.

## 355 Kg கொக்கெய்ன்... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே, தேசிய அபாயகரமான போதைப்பொருள் கட்டுப்பாட்டு சபையின் பிரதிநிதிகள், அரசாங்க தரப்பினர் மற்றும் போதைப்பொருள் தடுப்பு பணியகங்கள் அதிகாரிகள் முன்னிலையில் முழு வெளிப்படைத்தன்மையுடன் இவை அழிக்கப்பட்டன.

## வலம்புரி கவிதா... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

*இந்த கவியரங்கத்தில் நான்கு நிமிடங்களுக்கு உட்பட்ட கவிதை பாடப்படுமென, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.*

*இது தொடர்பாக நஜ்முல் ஹுசைன் (தலைவர்) 074 143 8447 அல்லது இளநெஞ்சன் முர்ஷிதீன் (செயலாளர்) 077 738 8149 அல்லது ஈழகணேஷ் (பொருளாளர்) 071 756 3646 ஆகியோருடன் தொடர்பு கொள்ளுமாறும், ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.*

# யாழ்.போதனாவில் என்பு மச்சை மாற்று சத்திர சிகிச்சை நிலையம்

## சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரனவால் விரைவில் திறப்பு

(யாழ்.விசேட நிருபர்)






இரத்த புற்றுநோய் மற்றும் அதனோடு இணைந்த நோய்களுக்கான சிகிச்சைகள் வழங்கக் கூடிய என்புமச்சை மாற்று சத்திரசிகிச்சை நிலையம் ((Bone Marrow Transplant Unit)) யாழ்.போதனா வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இவ்வாறான சிகிச்சை நிலையம் மகரகம வைத்தியசாலை மற்றும் கொழும்பு சிறுவர் வைத்தியசாலை ஆகிய இரண்டில் மாத்திரம் இதுவரை காணப்பட்டது. இந்நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை மூன்றாவது நிலையமாக பதிவு பெறுகின்றது.

இவ்வாறான சிகிச்சையை தனியார் வைத்தியசாலை அல்லது இந்தியா போன்ற வெளிநாடுகளில் பெறுவதாயின் பல மில்லியன் செலவீனம் ஏற்படும்.

இந்த சிகிச்சை மிகவும் சிக்கலான விடயங்களை கொண்டுள்ளது. அத்துடன் இரண்டு விசேட படுக்கையறைகளை கொண்டுள்ளது. எனவே மாதமொன்றில் இருவருக்கு மாத்திரம் சிகிச்சை செய்யமுடியும்.

சுகாதார அமைச்சின் வழிகாட்டுதலின் அடிப்படையில் வைத்திய நிபுணர்களின் கடுமையான முயற்சியில் பல சிரமங்களுக்கு மத்தியில் இந்நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த சிகிச்சைப் பிரிவு சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரனவால் எதிர்வரும் வாரமளவில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படுமென தெரிவிக்கப்பட்டது.

# குருதி தட்டுப்பாடு

(கரவெட்டி தினகரன் நிருபர்)

யாழ்ப்பாணம் போதனா. வைத்தியசாலையில் அனைத்து விதமான குருதிகளுக்கும் தட்டுப்பாடு நிலவுவதுடன் , குறிப்பாக ஓ பாசிட்டிவ் இரத்த வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே தகுதியுடைவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள இரத்த வங்கிக்கு நேரில் வந்து, இரத்ததானம் வழங்கி உயிர் காக்கும் உன்னத பணிக்கு உதவுமாறு யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கி பிரிவினர் கோரியுள்ளனர்.

## வடக்கின் உதயம்

# துன்னாலையில் விசேட சுற்றிவளைப்பு 17பேர் கைது

(நாகர்கோவில் விசேட நிருபர்)



வடமராட்சி துன்னாலை பகுதியில் நேற்று (12) அதிகாலை இராணுவம் மற்றும் மோப்பநாய்களின் உதவியுடன் அரச புலனாய்வாளர்களின் தகவலுக்கமைய பொலிஸ் பாரிய சுற்றிவளைப்பில் பொலிஸார் ஈடுபட்டனர். இதில் 17பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யுத்திய சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது நீதிமன்றால் உத்தரவிடப்பட்ட திறந்த பிடியாணைகள் , பிடியாணைகள் , சட்டவிரோத மதுபான, கசிப்பு விற்பனையாளர்கள், மற்றும் குற்றச்செயல்களில் ஈடுபட்ட 17 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர் படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மாணிக்கவாசகர் சுவாமிகள் குருபூசையும் சிறப்பு சொற்பொழிவும்

(கோப்பாய் குறூப் நிருபர்)

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவசிறீபால. திரு குணானந்த குருக்கள் நடத்தும் மாணிக்கவாசகர் சுவாமிகள் குருபூசையும் சிறப்பு சொற்பொழிவும் 3, 4ஆம் தொடர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை(14) காலை 8.30 மணிக்கு நடை பெறவுள்ளது.

சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இந்நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

சிறுப்பிட்டி மேற்கு நாகதம்பிரான் ஆலய பிரதான மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி மூத்த விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் கலந்து கொள்வார்.

"மாணிக்கவாசகர் சுவாமிகளின் வாக்கும் வாழ்வும்" என்னும் விடயப்பொருளில் இளம் சைவப்புலவர் க.கயிலைவாசன் சொற்பொழிவாற்றுவார்.

இதேநேரத்தில், நவாலி தெற்கு நாகராஜா இராஜேஸ்வரி அம்பாள் ஆலய பிரதான மண்டபத்தில் சைவப்புலவர் செ. த.குமரன் "மாணிக்க வாசகர் சுவாமிகளின் அன்பு" என்னும் விடயப் பொருளில் சொற்பொழிவாற்றுவார். இரு நிகழ்வுகளிலும் மாணிக்கவாசகர் சுவாமிகள் குருபூசையும் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

# ஜனாதிபதி புலமைப்பரிசில் வழங்கும் நடவடிக்கைகள் யாழில் ஆரம்பம்

(கோப்பாய் குறூப் நிருபர்)

க.பொ.த உயர்தரம் மற்றும் முதலாம் தரம் முதல் 11ஆம் தரம் வரை கல்வி கற்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தின் மூலம் வழங்கப்படும் புலமைப்பரிசில் உதவித்தொகையை நேற்று வெள்ளிக்கிழமை முதல் மாவட்ட மட்டத்தில் செயற்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, பதுளை, மாத்தளை மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களில் நாளை 13ஆம் திகதியும் கிளிநொச்சி மாவட்டத்தில் நாளை மறுதினம் 14 ஆம் திகதியும், வவுனியா, மட்டக்களப்பு, இரத்தினபுரி, கேகாலை, நுவரெலியா, களுத்துறை, மன்னார், அம்பாறை, குருநாகல், கண்டி மாவட்டங்களில் எதிர்வரும் 17ஆம் திகதியும் முல்லைத்தீவு, திருகோணமலை, பொலன்னறுவை மாவட்டங்களில் எதிர்வரும் 18ஆம் திகதியும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 15ஆம் திகதியும், கம்பஹா மாவட்டத்தில் 16, 17ஆம் திகதிகளிலும், காலி மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் எதிர்வரும் 15, 16ஆம் திகதிகளிலும், மொனராகலை, மாத்தறை மாவட்டங்களில் 19ஆம் திகதியும், புத்தளம் மாவட்டத்தில் 22ஆம் திகதியும் புலமைப்பரிசில்களை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# தற்கொலைகள் சம்பவங்கள் அதிகரிப்பு

(கோப்பாய் குறூப் நிருபர்)

தற்கொலை முயற்சிகளால் பாதிக்கப்பட்டு கடந்த ஆண்டு ஆயிரம் பேர் வரை யாழ்.போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளதாக யாழ். போதனா மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சை பிரிவின் மருத்துவ நிபுணர் முத்துலிங்கம் நவநீதன் தெரிவித்துள்ளார்.

யாழ்.போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தலைமையில் மருத்துவர்கள் பங்கேற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் மேலும் கருத்து வெளியிட்ட மருத்துவர் நவநீதன், தற்கொலைகள், தற்கொலை முயற்சிகள் அதிகரித்து வருகின்றன. யாழ். போதனா மருத்துவமனையில் 750 முதல் ஆயிரம் பேர் வரையிலானவர்கள் தற்கொலை முயற்சியால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். இந்நிலையில், 75 100 பேர் வரை தற்கொலை செய்து கொண்டதாக தெரியவருகின்றது.

# 87 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது

(சாவகச்சேரி விசேட நிருபர்)

சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று காலை 87 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட காரும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கடந்த அதிகாலை வேளை சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ32 வீதியில் இராணுவ புலனாய்வுப் பிரிவின் தகவலுக்கமைவாக வவுனியாவைச் சேர்ந்த நபரொருவர் அரை கிலோ கஞ்சாவுடன் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். மேற்படி நபர் அரசாங்க உத்தியோகத்தர் என தெரியவருகின்றது.

அதன்பின்னர் கைதான நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் கச்சாய் பகுதியைச் சேர்ந்த நபரொருவர் நேற்று அதிகாலை வேளையில் 87 கிலோ கஞ்சாவுடன் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## மலைச்சாரல்

# காடுகள் அழிக்கப்படுவதால் குடிநீருக்கு பாதிப்பு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)



சிங்கராஜவனத்துக்கு மிக அண்மித்த வனப்பகுதியில் தனியார் தோட்ட நிலங்களில் காடுகளை துப்புரவு செய்து பயிர்ச்செய்கை செய்யப்படுவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் மனித செயற்பாடுகளால் இறக்குவானை கொடக்கவல பிரதேச மக்களுக்கான குடிநீர் விநியோகத்திலும் வனப்பகுதியில் இயற்கை நீரூற்றுக்கள் மற்றும் சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக புகார் தெரிவிக்கப்படுகிறது

சிங்கராஜ வனத்துக்கு அண்மித்த றோஸ்மேறி தனியார் தோட்டம் மற்றும் ஏனைய தனியார் தோட்டங்கள் உட்பட சில இடங்களில் காடுகள் துப்புரவு செய்யப்படுவது குறித்து பரவலான குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படுகின்றது. இருந்தபோதிலும் அதிகாரிகள் இவ்விடயத்தில் அக்கறை காட்டுவதில்லை என சமூக செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

காணிகளை சிலர் விலை கொடுத்து வாங்கியதாகவும் காணிகளுக்கான உறுதிகளும் தம்மிடம் இருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் மேற்படி நிலங்கள் சிங்கராஜவனத்திற்கு அண்டிய பிரதேச காடுகளின் நடுவில் அமைந்திருப்பது பிரதேச நீர் நிலைகளுக்கும் சுற்றாடலுக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக சுட்டிக்காட்டப்படுகிறது

# தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை வழங்குமாறு கோரிக்கை

(தலவாக் கலை குறூப் நிருபர்)



தோட்டத் தொழிலாளர்களுக்கு உடனடியாக ரூ. 1700 சம்பள உயர்வு வழங்க தோட்டக்கம்பனிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வட்டகொடை தோட்ட தொழிலாளர்கள் நேற்று காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வட்டகொடை தோட்டத்தைச் சேர்ந்த வட்டகொடை மேற்பிரிவு, வட்டகொடை கீழ்பிரிவு மற்றும் யொக்ஸ்போட் ஆகிய தோட்ட பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் தோட்ட தேயிலை தொழிற்சாலைக்கு அருகாமையில் நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், அரசாங்கத்தால் அதிகரிக்கப்பட்ட நாளாந்தம் 1,700 ரூபா சம்பளத்தை தமக்கு வழங்க தோட்ட கம்பனிகள் எதிர்ப்பு தெரிவித்து வருவதாகவும், போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## நுவரெலியா மாநகர சபைக்கு சொந்தமான

# கழிவகற்றும் பவுசர் வாகனம் - மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்து



நுவரெலியா மாநகர சபைக்கு சொந்தமான கழிவகற்றும் பவுசர் வாகனமும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதுண்டமையால் அதில் பயணித்த இருவர் பலத்த காயங்களுக்குள்ளாகி நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து சம்பவம் நுவரெலியா பொலிஸ் நிலையத்துக்கு அருகிலுள்ள உடப்புஸ்ஸலாவை நோக்கி செல்லும் பிரதான வீதியில் நேற்று காலை 10.30 மணியளவில் இடம்பெற்றது.

நுவரெலியா பொலிஸ் நிலையத்துக்கு அருகில் கண்டி வீதியை நோக்கி பயணித்த நுவரெலியா மாநகர சபைக்கு சொந்தமான கழிவகற்றும் பவுசருடன் ஹவாஎலி பகுதியை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் மோதுண்டுள்ளது.

சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவருக்கும் பலத்த காயம் ஏற்பட்டு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை கழிவகற்றும் பவுசரை செலுத்தி வந்த சாரதியை நுவரெலியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா போக்குவரத்து பொலிஸ் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

(ரமேஷ்)

# உத்தேச பொது நிதி முகாமைத்துவ சட்டமூல தெளிவூட்டும் நிகழ்வு





உத்தேச பொது நிதி முகாமைத்துவ சட்டமூலம் மற்றும் பொருளாதார மாற்றத்திற்கான சட்டமூலம் தொடர்பில் மத்திய மாகாணத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு தெளிவூட்டும் நிகழ்வு அண்மையில் (10) பல்லக்கலேயிலுள்ள மத்திய மாகாண சபை வளாக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தின் வழிகாட்டலின் கீழ் மத்திய மாகாண ஆளுநர் அலுவலகம், மத்திய மாகாண சபை மற்றும் அரசாங்க தகவல் திணைக்களம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

நிதி ஒழுக்கம் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பேணுதல், உலகப் பொருளாதாரப் போக்குகளுக்கு ஏற்ப உள்ளூர் பொருளாதாரத்தை வலுப்படுத்துதல், அதற்கான சட்டங்களை ஏற்றுக்கொள்வது குறித்தும் தெரிவிக்கப்பட்டதுடன், மத்திய மாகாண மாணவர் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சிறுவர்கள் பலர் கலந்துகொண்டனர்.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் சாந்தனி விஜேவர்தன, அரச நிதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜே.எம்.யு.பி.ஜெயமஹா, அரச நிதிக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் ஜயனி விக்கிரமாராச்சி, ஜனாதிபதியின் உதவிச் செயலாளர் டி.உமேஷா ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# வலப்பனை மாவோ தமிழ் மகா வித்தியாலயத்திற்கு Smart tv கையளிப்பு

(பூண்டுலோயா நிருபர்)



நுவரெலியா மாவட்டம் வலப்பனை தமிழ் மகா வித்தியாலயத்திற்கு பிரித்தானிய மலையக மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் Smart Tv ஒன்று கையளிக்கப்பட்டது.

கல்விக்கு கரம் கொடுப்போம் என்ற தொனிப்பொருளில் குறித்த Smart tv கையளிக்கப்பட்டது. குறித்த நிகழ்வில் ஒன்றியத்தின் தலைவர் சிவசங்கரா, சமூக சேவையாளர் திருச்செல்வம்,அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# தேயிலை தோட்ட உரிமையாளர் கொலை இருவர் கைது

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

எம்பிலிப்பிட்டிய கொலன்ன எப்டன் தோட்டப்பகுதியில் தோட்ட உரிமையாளர் துப்பாக்கியால் சுடப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் இருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மித்தனிய தொரகலயாய பகுதியில் தேயிலை தொழிற்சாலையில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டதுடன் இவர்களிடமிருந்து துப்பாக்கி , தோட்டாக்கள், மோட்டார் சைக்கிள், கையடக்க தொலைபேசி என்பன மீட்கப்பட்டுள்ளன.

இவர்கள் ஏற்கனவே பல குற்றசெயல்களில் தேடப்பட்டு வருகின்றவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். கொலன்ன பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கிழக்கின் குரல்





மட்டக்களப்பு களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத் தீர்த்தோற்சவத்தில் பல்லாயிரக்கணக்கான பக்த அடியார்கள் கலந்து கொண்டனர்.

(படம்: துறைநீலாவணை நிருபர்)

## ஆளுமை மிக்க பெண்கள் சமூகத்தில் உருவாக வேண்டும்

### கிழக்கு மாகாண பணிப்பாளர் தனஞ்சயன் தெரிவிப்பு!

(பெரியநீலாவணை விசேட நிருபர்)

பெண்கள் ஆளுமையில் சிறந்தவர்களாக சமூகத்தில் உருவாக்கப்பட வேண்டுமென கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் என். தனஞ்சயன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் கல்முனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட 2023/2024 கல்வியாண்டுக்கு தையல் பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்ட மற்றும் கடந்தாண்டு வெளியாகிய பெண்களின் ஆக்கத்திறன் வெளிப்பாட்டுக் கண்காட்சி மற்றும் விற்பனை (11) மருதமுனை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

கல்முனை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். ஏ. ஜாபிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மாகாணப் பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றும் போது

பெண்கள் குடும்பத்தின் ஒளி விளக்குகள். ஒவ்வொரு குடும்பத்திலும் பெண்களின் வகிபாகம் மிக முக்கியமானது. பெண்கள் சிறப்பாக செயற்பட வேண்டியது அவசியமானது.

வாழ்க்கைக்கு தேவையான திறன்களை பெண்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதில் எமது திணைக்களம் பற்றுறுதியுடன் செயற்பட்டு வருகிறது. ஆகவேதான் தையல் அடங்கலாக பெண்களுக்கு தேவையான வழிகாட்டல் பயிற்சிகளை நாம் வழங்கி வருகிறோம். ஆளுமையில் சிறந்த பெண்களை சமூகத்தில் உருவாக்குவதை நோக்கமாக கொண்டு எமது



கற்கை நெறி வடிவமைக்கப் பட்டுள்ளது. திணைக்களத்தால் பெண்களுக்கு தையல் பயிற்சி உட்பட வாழ்க்கை திறன் கற்கை நெறி வருடாந்தம் கற்பித்து கொடுக்கப்படுகிறது.

பாடசாலை கல்வியை தொடர முடியாமல் இடைவிலகியவர்களுக்கும் இக் கற்கை நெறி வரப்பிரசாதமாகும். ஏனென்றால் வாழ்க்கையில் உயர்வதற்கு இப்பயிற்சி நெறிகள் ஊக்கிகளாக அமையும்.

வருடாந்தம் சுமார் 40 பெண்களை கற்கை நெறியில் இணைத்து கொள்கிறோம். இவ்வேலைத்திட்டத்துக்காக உண்மையில் பெருமளவு நிதியை செலவிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## 19 வயது யுவதி துஷ்பிரயோகம் சந்தேகநபர் கைது

(கந்தளாய் தினகரன் நிருபர்)

அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 19 வயதுடைய யுவதியொருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய சந்தேகநபரை இம்மாதம் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற நீதவான் நேற்று(12) உத்தரவிட்டார். பேரமடுவ, அக்போபுர கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சந்தேக நபர் 19 வயதுடைய யுவதியை ஒருவருட காலமாக காதலித்து வந்துள்ளார்.

யுவதியின் வீட்டுக்கு தெரியாமல் வான்எல பகுதிக்கு அழைத்துச் சென்று துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியுள்ளார். யுவதியின் பெற்றோரால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

## கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரிக்கு புதிய மூன்று மாடி வகுப்பறைக் கட்டடம்

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவரும், கல்லூரியின் பழைய மாணவருமான எச். எம். எம். ஹரீஸின் முயற்சியின் பயனாக ஆறு கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியில் நிர்மாணிக்கப்படவுள்ள கேட்போர் கூடத்திற்கும், புதிய மூன்று மாடி வகுப்பறைக் கட்டடத்திற்குமான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி அதிபர் எம்.ஐ. ஜாபீர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவருமான எச். எம். எம்.ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கேட்போர் கூடத்துக்கு அடிக்கல் நாட்டி வைத்தார்.



இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம கௌரவ அதிதியாக கலந்துகொண்டதுடன் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம், கல்முனை பிரதேச செயலாளர் ஜெ. லியாக்கத் அலி ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வில் பாடசாலை முன்னாள் அதிபர்கள், கல்முனை, சாய்ந்தமருது கல்வி கோட்ட பாடசாலைகளின் அதிபர்கள், திணைக்கள தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர்கள், இணைப்பாளர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்கள் சங்கத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## உடலும் உளமும் நலம் பெற வேண்டுமெனில் விளையாட்டு முக்கியமாகும் !

### சம்மாந்துறை வலய கல்வி பணிப்பாளர் மகேந்திரகுமார்!

(காரைதீவு குறூப் நிருபர்)



உடலும் உள்ளமும் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமாக இருந்தால் விளையாட்டு மிகவும் அவசியமாகும். இவ்வாறு சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் செபமாலை மகேந்திரகுமார் தெரிவித்தார்.

சம்மாந்துறை வலயமட்ட விளையாட்டு போட்டி நேற்று(12) வெள்ளிக்கிழமை சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது.

சம்மாந்துறை வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ. முஸ்ரக்அலி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். மகேந்திரகுமார் கலந்து சிறப்பித்தார்.

மேலும் சிறப்பு அதிதிகளாக பிரதிக் பணிப்பாளர்களான யசீர் அரபாத், நிலோபரா நுஸ்ரத், சியாட், இறக்காமம் கோட்டக் கல்விப் பணிப்பாளர் மகுமூதுலெவ்வை உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்வில் முன்னதாக அதிதிகள் பாண்ட்வாத்தியம் கோலாட்டம் மற்றும் பல பாரம்பரிய நிகழ்வுடன் வரவேற்கப்பட்டார்கள்.

அங்கு பெருவிளையாட்டுகளில் கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயம் சாம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

அதற்கான வெற்றிக் கிண்ணத்தை பணிப்பாளர் மகேந்திர குமார் வித்தியாலய அதிபர் எஸ். இளங்கோபனிடம் வழங்கி வைத்தார். ஏனைய கண்கவர் நிகழ்வுகளும் நடைபெற்றன.

## பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி மாகாண மட்ட போட்டிக்கு தெரிவு



(தோப்பூர் குறூப் நிருபர்)

வலய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் தோப்பூர் பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி சார்பாக கலந்து கொண்ட மாணவிகளில் மூவர் வெற்றிப் பெற்று மாகாண மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அதிபர் ஏ.பி. அப்துல் ஜப்பார் தெரிவித்தார்.

தரம் 11 ஐச் சேர்ந்த கே.எம்.நிஸ்ரின் முதலிடத்தையும், தரம் 07 ஐச் சேர்ந்த M.A.மரியம் முதலிடத்தையும், இரண்டாமிடத்தை எம்.ஐ .அனா சரப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதில் வெற்றிபெற்ற மாணவிகளுக்கும் வெற்றிக்காக உழைத்த பாடசாலை விஞ்ஞானப் பாட ஆசிரியர்களுக்கும் இதற்கு துணை நின்ற ஏனைய ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் கோட்டக் கல்விப் பணிப்பாளரும் நன்றிகளை தெரிவித்துள்ளனர்.

## நிந்தவூரில் உள சமூக பிரச்சினைகள் தொடர்பில் இளைஞர்களை வலுவூட்டும் நிகழ்வு



(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

உள சமூக பிரச்சனைகள் தொடர்பில் இளைஞர்களை விழிப்புணர்வூட்டும் செயலமர்வு நிந்தவூர் பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் எம்.ரீ.சரீப் தலைமையில் இடம் பெற்ற மேற்படி நிகழ்வில் உளவளத்துணை உத்தியோகத்தர் ரீ.எம்.எம்.ஹப்ரத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிரதான வளவாளராக அம்பாறை மாவட்ட உளவளத்துணை இணைப்பாளர் மனுஸ் அபூபக்கர் கலந்து கொண்டு விரிவுரையை நிகழ்த்தினார்.

## காரைதீவில் ஆடிவேல் விழா பாற்குடபவனி!



காரைதீவு மாவடி ஶ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த ஆடிவேல் விழா மகோற்சவத்தின் பாற்குட பவனி நேற்று (12) வெள்ளிக்கிழமை கண்ணகை அம்மன் ஆலயத்தில் நடைபெற்றது.

(படங்கள்: காரைதீவு குறூப் நிருபர்)

## ஜனநாயக நாட்டில் தேர்தல்கள் உரிய காலத்தில் நடத்தப்படவேண்டும்

(பாலமுனை தினகரன் நிருபர்)



இலங்கை ஜனநாயக நாடு என்பதை நிரூபிப்பதற்காக அவ்வப்போது தேர்தல்கள் நடத்தப்படுவதுடன், நீதித்துறை, நிர்வாகத்துறை என்பன அதன் சுய ஆதிக்கத்தின் கீழ் செயற்படுத்தப்பட வேண்டுமென இலங்கை ஜனநாயக முன்னணியின் தலைவர் ஏ.பீ. கமால்தீன் கேட்டுள்ளார்.

இதுதொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே ஜனநாயக முன்னணியின் தலைவர் ஏ.பீ. கமால்தீன் மேற்கொண்டவாறு தெரிவித்தார்

அவர் தொடர்ந்து இதுதொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல்கள் உரிய காலப்பகுதியில் நடத்தப்பட்டு ஜனநாயகம் பாதுகாக்கப்படவேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்க ஊழியர்களுக்கு 2025 ஆம் ஆண்டிலிருந்து சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என்று அறிவித்துள்ள போதிலும், இவ்வாறான சம்பள அதிகரிப்பு உடனடியாக வழங்கப்பட வேண்டும் என அரசாங்க ஊழியர்களும், தொழிற்சங்கங்களும் வேண்டி நிற்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் இலகுவாக வெற்றியடைய இது வாய்ப்பாக அமையும் என்பதை ஜனநாயக முன்னணியின் சார்பாக வலியுறுத்தி கூறுவதாக அவர் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸின்

## அட்டாளைச்சேனை பிரதேச கட்சிக் கிளை புனரமைப்பு வேலை திட்டம்

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை பிரதேச கட்சிக் கிளைகளின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பிலான புனரமைப்பு வேலைத் திட்டம் சம்பந்தமான கூட்டம் கடந்த 9ஆம் திகதி அக்கரைப்பற்றில் கட்சியின் உச்சபீட உறுப்பினர் ஏ.சீ. சமால்டீன் தலைமையில் நடைபெற்றது.

இவ்விசேட கூட்டத்தில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், அக்கரைப்பற்று முஸ்லிம் காங்கிரஸின் அமைப்பாளருமான ஏ.எல் தவம், அட்டாளைச்சேனை முஸ்லிம் காங்கிரஸின் மத்திய குழு தலைவர் எஸ்.எல்.ஏ. ஹலீம் உட்பட அக்கரைப்பற்று மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.



எதிர்காலத்தில் நடைபெறவுள்ள சகல தேர்தல்களையும் சகல விதத்திலும் எமது கட்சி எதிர்கொண்டு முஸ்லிம் சமூகத்தின் விடிவுக்காய் பாடுபடவுள்ள இச்சந்தர்ப்பத்தில், கட்சியின் வேலைத்திட்டத்தை இன்னும் விஸ்தரிப்பு செய்யும் நோக்கில் அக்கரைப்பற்று பிரதேசத்தில் கட்சியின் கிளைகள் புனரமைப்பு செய்யும் வேலைத்திட்டத்தை உடனடியாக ஆரம்பிப்பது எனவும், அட்டாளைச்சேனை பிரதேசத்தில் 03 இளைஞர் கிளைகளையும், 09 மகளிர் கிளைகளையும் புனரமைக்கும் பணிகளை ஆரம்பிப்பதற்கான சகல ஏற்பாடுகளும் உடனடியாக இடம்பெறும் என முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் எம். எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

## 34 வருட கல்விச் சேவையிலிருந்து ஓய்வு!

(காரைதீவு குறூப் நிருபர்)



சம்மாந்துறை வலய ஆரம்பநெறி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.அப்துல் கபூர் தனது 60ஆவது வயதில் ஓய்வுபெறுவதை முன்னிட்டு வலயக்கல்விப் பணிமனையில் விருந்துபசார நிகழ்வொன்று அண்மையில் சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார் முன்னிலையில் நடைபெற்றது.

சம்மாந்துறை வலய கல்வி சார் உத்தியோகத்தர்களின் நலன்புரி ஒன்றிய தலைவரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா தலைமையில் இந் நிகழ்வு நடைபெற்றது

சம்மாந்துறை வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர்களான பி.பரமதயாளன், என்.எம்.நாசிர் அலி, ஏ.எம்.மொகமட் சியாத் உள்ளிட்ட கல்வி சார் உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பித்தனர். ஓய்வுபெறும் உதவிக் கல்விப் பணிப்பாளர் கபூர் தொடர்பாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.பரமதயாளன், இறக்காமம் கோட்டக் கல்விப்பணிப்பாளர் யூ.எல். மகுமூதுலெவ்வை, உதவிக் கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் உரையாற்றினர். ஆரம்பநெறி ஆசிரிய ஆலோசகர் இசட்.எம்.றிஸ்வி கவிதையாற்றி வாசித்தார்.

கபூரின் அர்ப்பணிப்பான சேவையைப்பாராட்டி வலயக்கல்விப் பணிப்பாளர் மகேந்திரகுமார் பொன்னாடை போர்த்திக்கௌரவித்தார். அத்துடன் நன்றியுடன் வாழ்த்துரை வழங்கினார்.

24வருட காலம் ஆசிரியப் பணியையும், 04 வருட காலம் ஆசிரியர் ஆலோசகர் பணியையும், 06வருட காலம் உதவிக் கல்விப் பணிப்பாளர் பணியையும் நிறைவு செய்து கடந்த 9ஆம் திகதி ஓய்வு பெறும் கபூர் நல்லதொரு வளவாளராவார்.

உதவிக் கல்விப் பணிப்பாளர் கபூர் ஏற்புரை நிகழ்த்துகையில் தான் 34வருடங்களுக்குமேல் கல்விச்சேவையாற்றியதாகவும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் யாருடனும் முரண்படவில்லை. மாறாக அனைவரும் ஒத்துழைப்பு நல்கியதாகவும் தெரிவித்து நன்றி கூறினார்.

இறுதியாக அவரை அனைவரும் சேர்ந்து அவரது இல்லம் வரை கொண்டு சென்று குடும்பத்தினரிடம் ஒப்படைத்து கௌரவம் செய்தனர்.

# BYD ஐ அறிமுகம் செய்யும் JKCG Auto நிறுவனம்

உலகின் முன்னணி NEVகள் (புதிய மின்சார வாகனங்கள்) உற்பத்தியாளர், BYD, அதன் பயணிகள் வாகன அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர் மூலம், கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள இலங்கையின் மிகப் பெரிய கூட்டு நிறுவனமான (CSE) John Keells Holding PLC (JKH) மற்றும் CG Auto Pte. Ltd., டுபாயை தலைமையிடமாகக் கொண்ட CG Corp Global இன் துணை நிறுவனம், BYD மின்சார வாகனங்களான BYD NEVகளை உத்தியோகபூர்வமாக இலங்கையில் EV மோட்டார் ஷோ 2024 இல் வெளியிட்டது, இது போக்குவரத்து தொழில்நுட்பத்தின் ஒரு புரட்சிகரமான மைல்கல்.



2024 ஜூன் 28 30 வரை BMICH இல் நடைபெற்ற கண்காட்சிக்கான பிரதம அதிதியாக இலங்கை பிரதமர் தினேஷ் குணவர்தன BYD NEV களை பொதுமக்களுக்கு வெளியிட்டார்.

இந்நிகழ்வில் கௌரவ அதிதிகளாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ரூபசிங்க மற்றும் இலங்கை மோட்டார் விளையாட்டு பந்தய வீரர் டிலந்த மாலகமுவ ஆகியோர் கலந்துகொண்டனர்.

மோட்டார் ஷோவில் வெளியிடப்பட்ட புதிய மின்சார வாகனங்களில் BYD புதிய மின்சார வாகனங்களான luxury sedan, BYD SEAL அடங்கும். அதன் நேர்த்தியான வடிவமைப்பு, 650 கிமீ வரையிலான அதி நீண்ட தூரம் மற்றும் 0100 கிமீ/மணி முதல் 3.8 வினாடிகள் அக்ஸ்ரலேஷன் , BYD ATTO 3 ஆகியவற்றிற்கு புகழ்பெற்றது. BYD ATTO 3, ஒரு பல்துறை மற்றும் குடும்பத்திற்கு ஏற்ற SUV, அதன் விசாலமான உட்புறம், மேம்பட்ட பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் BYD DOLPHIN உடன் இணைந்து 480 கிமீ வரை வரம்பிற்கு தனித்து நிற்கிறது மற்றும் செயல்திறன், 410 கிமீ வரையிலான வரம்பையும், 7.9 வினாடிகள் 0100 கிமீ/மணியிலிருந்து வேகமான அக்ஸ்ரலேஷன் நேரத்தையும் வழங்குகிறது.

BYD விரைவில் இலங்கையில் BYD DMi தொழில்நுட்பம் (BYD Super Plugin Hybrid EV Technology) கொண்ட முதல் மாதிரியான BYD SEALION 6 DMi வாகனத்தை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. சாரரி வரம்பு (Driving Range) 1,100Km வரை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




# சியபத பினான்ஸ் நிறுவனத்தின் நாவலப்பிட்டி கிளை திறப்பு

முன்னணி நிதி நிறுவனமான சியபத பினான்ஸ் பிஎல்சி தனது விசுவாசமான வாடிக்கையாளர்களுக்காக, நாவலப்பிட்டியில் கம்பளை வீதி, இலக்கம் 54 இல் தனது 49ஆவது கிளையை அண்மையில் திறந்து வைத்துள்ளது. அதன் நாடளாவிய வலையமைப்பிற்கு புதியதொரு சேர்க்கையான நாவலப்பிட்டி கிளையானது, அதன் தனிப்பயனாக்கப்பட்ட மற்றும் முழுமையான நிதித் தீர்வுகள் மூலம், வர்த்தக சமூகத்தை வலுவூட்டுவதில் முக்கிய பங்கை வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிளையின் திறப்பு விழாவில் சியபத பினான்ஸ் பிஎல்சியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆனந்த செனவிரத்ன, பிரதம செயற்பாட்டு அதிகாரி ரஜீவ் டி சில்வா, சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் ஊழியர்கள் அரசாங்க மற்றும் தனியார் வங்கிகள் மற்றும் காப்புறுதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



புதிய கிளை திறப்பு விழா குறித்து சியபத பினான்ஸ் பிஎல்சியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆனந்த செனவிரத்ன கருத்துத் தெரிவிக்கையில், 'நாவலப்பிட்டியானது விவசாயத் துறையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களைக் கொண்ட பிரதேசமாகும். தேயிலை மற்றும் கோப்பி பயிர்ச்செய்கையில் இருந்து மசாலா உற்பத்தி வரை, மக்கள் விவசாயத்தை தங்கள் முதன்மையான வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். இந்தப் பகுதியில் எங்களது விரிவாக்கம், அவர்களின் தொழில்களை உயர்த்துவதற்கும், அதனால் அவர்களின் வாழ்க்கையை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவதற்கும் மிகவும் தேவையான நிதி உதவியை வழங்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.' என்று குறிப்பிட்டார்.

நிறுவனம் குத்தகை, நிலையான வைப்புத்தொகை, சேமிப்பு, தங்க நிதியளிப்பு, வணிகக் கடன்கள், தனிநபர் கடன்கள், மற்றும் அதன் தானியங்கு கட்டண வசதியான Smart Pay வரையிலான ஒரு பரந்த தயாரிப்பு போர்ட்ஃபோலியோவைக் கொண்டுள்ளது.

# இலங்கையில் புரட்சிகர புதிய மின்சார வாகன வரிசையை அறிமுகப்படுத்தும் Evolution Auto



இலங்கையின் பொருளாதாரம் சீரகுலையக் காரணமான எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு மாற்றீடாக மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களின் தேவை இலங்கை மக்களால் உணரப்பட்டது. அந்தத் தேவையை நன்கு உணர்ந்து, அதை நிறைவேற்றும் முயற்சியில் Evolution Auto இப்போது இறங்கியுள்ளது.

Sensei Capital Partners, Atman Group, Sino Lanka Private Limited ஆகியவற்றுக்கு இடையேயான முன்னோடி கூட்டு முயற்சியான Evolution Auto, இலங்கையில் நிலையான போக்குவரத்தில் புரட்சியை ஏற்படுத்தி இலங்கையர்களின் பயண வழியை மாற்றியமைத்து, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துகிறது.

புதிய EV வரிசையில் பின்வருவன அடங்கும்:

*Mahindra Treo:*

இது மூன்று சக்கர பயணிகள் மற்றும் சரக்கு வாகனமாகும்.இதன் நம்பகத்தன்மை மற்றும் செயல்திறனுக்காக இந்தியாவில் அதிகம் விற்பனையாகும் மூன்று சக்கர மின்சார வாகனமாக இது உள்ளது.

*Ather Electric Scooters:*

இவை அதிநவீன தொழில்நுட்பத்தை சிறந்த செயல்திறனுடன் இணைக்கும் இந்தியாவின் பழமையான மற்றும் மிகவும் ஸ்தாபிக்கப்பட்ட மின்சார ஸ்கூட்டர்களாகும்.

*Revolt Electric Bikes:*

சக்தி மற்றும் நிலைத்தன்மையின் தடையற்ற கலவையை வழங்கும் இந்தியாவின் மிகவும் பிரபலமான மின்சார சைக்கிள்களாக இவை உள்ளன.

சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் பொருளாதார ரீதியில் இலாபகரமான உயர்மட்ட மின்சார வாகனங்களை இலங்கை அணுகுவதை இந்த கூட்டாண்மை உறுதி செய்கிறது.

# சிறு தொழில் பால் உற்பத்தியாளர்களுக்கு உதவ ரூ. 500 மில்லியன் நிதியை ஒதுக்கிய DFCC வங்கி



இலங்கையின் பாலுற்பத்தித் தொழில்துறையை வலுப்படுத்துவதில் சாதனைமிக்க ஒரு முயற்சியாக, நிலைபேணத்தக்க அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதில் தனது அர்ப்பணிப்புக்கு அமைவாக, சிறு தொழில் பால் உற்பத்தியாளர்களுக்கு கடன் வழங்குவதற்காக ரூபா 500 மில்லியன் தொகையை DFCC வங்கி ஒதுக்கியுள்ளது.

DFCC வங்கியின் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிப் பிரிவின் சிந்தனையில் உதித்த இந்த அர்ப்பணிப்புடனான முயற்சி, அமெரிக்க விவசாய திணைக்களத்தின் (United States Department of Agriculture USDA) உதவியுடனான Market Oriented Dairy (MOD) செயற்திட்டத்தின் பயனாளிகளான பாலுற்பத்தியாளர்களுக்கு கடன் வழங்கிய வெற்றிகரமான அனுபவத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாக DFCC வங்கியால் வழங்கப்படுகின்ற இந்த விசேட கடன் திட்டமானது, சலுகை அடிப்படையிலான வட்டி வீதங்களுடன் இத்துறைக்கு முக்கியமான ஆதரவை வழங்கி, குறிப்பாக இலங்கையின் பாலுற்பத்தித் துறையில் முக்கிய அங்கம் வகிக்கின்ற சிறு தொழில் பால் உற்பத்தியாளர்களுக்கு, அடிமட்டத்தில் வளர்ச்சியை ஊக்குவிப்பதே அதன் நோக்கமாகும்.

DFCC வங்கியின் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிப் பிரிவின் உப தலைவர் சந்தன வணிகசேகர அவர்கள் Market Oriented Dairy (MOD) செயற்திட்டம் தொடர்பான நிறைவு வைபவத்தின் போது இது குறித்த அறிவிப்பை வெளியிட்டார். "Sri Lanka Dairy The Art of the Possible" (இலங்கை பால் உற்பத்தி சாத்தியங்களின் கலை) என்ற நிகழ்வானது 2024 மே 17 அன்று கோல்பேஸ் ஹோட்டலில் இடம்பெற்றது. இலங்கையில் சிறு தொழில் பாலுற்பத்தியாளர்களுக்கு உதவுவதில் MOD செயற்திட்டத்தின் சாதனைகள் இந்நிகழ்வில் கொண்டாடப்பட்டன.

## 2024 இல் இலங்கையில் சிறந்த பொது வங்கி காப்புறுதி வழங்குனராக அங்கீகரிக்கப்பட்ட

# HNB பொதுக் காப்புறுதி



இலங்கையில் உள்ள முன்னணி பொதுக் காப்புறுதி வழங்குனர்களில் ஒன்றான HNB பொதுக் காப்புறுதி (HNB General Insurance) ஆனது, புகழ்பெற்ற Global Banking and Finance Review UK இனால், 2024 இல் இலங்கையின் சிறந்த பொது வங்கி காப்புறுதி வழங்குனராக (Best General Bancassurance Provider in Sri Lanka 2024) கௌரவிக்கப்பட்டுள்ளது.

HNB பொதுக் காப்புறுதியின் விசேடத்துவத்திற்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பையும், வங்கி காப்புறுதித் துறையில் அதன் சிறந்த செயல்திறனையும் இந்த பெருமைக்குரிய கௌரவம் கோடிட்டுக் காட்டுகிறது. HNB பொதுக் காப்புறுதி குழுவானது, புத்தாக்கமான காப்புறுதித் தீர்வுகளை வழங்குவதற்கும், வங்கிக் கூட்டாளர்களுடன் வலுவான உறவுகளை வளர்ப்பதற்கும் மற்றும் நாடு முழுவதும் உள்ள வாடிக்கையாளர்களுக்கு இணையற்ற சேவையை வழங்குவதற்கும் அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பின் மூலம் தொடர்ந்தும் செயற்பட்டு வருகிறது. இந்த அங்கீகாரமானது, குழுவினரின் அர்ப்பணிப்பு மற்றும் வங்கிக் காப்புறுதி வணிகத்தில் சிறந்து விளங்குவதற்கான அவர்களது இடைவிடாத முயற்சிக்கு ஒரு சான்றாகும்.

HNB பொதுக் காப்புறுதியின் பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO) சித்துமின ஜயசுந்தர இது பற்றி தெரிவிக்கையில், "இந்த மதிப்புமிக்க விருதைப் பெறுவதில் நாம் பெருமையடைகிறோம். இது எமது குழுவினரின் அயராத முயற்சிகள் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட எமது காப்புறுதி தீர்வுகள், எமது வங்கி காப்புறுதி கூட்டாண்மை மூலம் ஒப்பிட முடியாத சேவையை வழங்குவதற்கான எமது அர்ப்பணிப்பு ஆகியவற்றை பிரதிபலிக்கிறது என்றார்.

# நாடளாவிய ரீதியில் அதிநவீன டிஜிட்டல் தீர்வுகளுடன் விஸ்தரிக்கப்பட்ட PLC Al-Safa



இலங்கையில் முதலாவது, வங்கி அல்லாத, முழுமையான சேவைகளை வழங்கும் இஸ்லாமிய நிதி வழங்குனர் என்ற சிறப்பைக் கொண்ட பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பீஎல்சி AlSafa பிரிவு 2005 ஆம் ஆண்டு முதல் நம்பகமான மற்றும் விசுவாசமான ஷரியாஇணக்கப்பாட்டு வழங்கல்கள் மற்றும் சேவைகளை வழங்கி வருகின்றது. கடந்த இரு தசாப்தங்களாக, உயர் தரமான மற்றும் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய சேவைகளை வழங்குவதில் அது நன்மதிப்பைக் கட்டியெழுப்பியுள்ளது. முழுமையாக ஷரியாஇணக்கப்பாடு கொண்ட, மாற்று நிதியியல் தீர்வுகளை நாடுகின்ற இலங்கை மக்களுக்கு AlSafa சேவைகளை வழங்கி வருகின்றது.

செயற்பட ஆரம்பித்தது முதல் PLC AlSafa ஆனது ஷரியாஇணக்கப்பாட்டு நிதிக் கட்டமைப்பினுள் புத்தாக்கத்தின் மீது அர்ப்பணிப்புடன் இயங்கி வருகின்றது. ஷரியா மேற்பார்வை சபையை வலுப்படுத்தி இணக்கப்பாடு மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றின் மீதான தனது அர்ப்பணிப்பை இந்நிறுவனம் மேம்படுத்தியுள்ளது. தனது வழங்கல்கள், சேவைகள் மற்றும் நடைமுறைகளை கிரமமான அடிப்படையில் தொடர்ச்சியாக மீளாய்வு செய்து, அவை ஷரியா கோட்பாடுகளுக்கு இணங்குகின்றன என்பதை உறுதி செய்வது மட்டுமன்றி, அதிகபட்ச மதிப்பு, நெகிழ்வுத்தன்மை மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றையும் வழங்குகின்றன என்பதை உறுதி செய்வதற்கு இது PLC AlSafa க்கு இடமளிக்கின்றது.

இது தொடர்பில் நிறுவனத்தின் பயணம் குறித்து PLC AlSafa வின் இஸ்லாமிய நிதி மற்றும் டிஜிட்டல் தயாரிப்புக்களுக்கான தலைமை அதிகாரியான திரு. ஃபஸ்மில் மௌலானா அவர்கள் கருத்து வெளியிடுகையில், “இலங்கையில் ஷரியாஇணக்கப்பாடு கொண்ட முழுமையான சேவைகளை வழங்குவதில் நாங்கள் முன்னோடிகள் மட்டுமன்றி, முதலீட்டில் மட்டும் கவனம் செலுத்தாது கடன் மற்றும் பரிவர்த்தனை நிதி ஆகியவற்றிலும் கவனம் செலுத்தியுள்ளோம் என்றார்.

# புனித ரோச்சஸ் கல்லூரிக்கு கணினிகளை வழங்கிய AMW மற்றும் Yamaha OBM



Yamaha Outboard Motors (OBM) உடன் இணைந்து Associated Motorways (Private) Limited (AMW) நிறுவனமானது சிலாபம், அம்பகந்தவிலவில் உள்ள புனித ரோச்சஸ் கல்லூரிக்கு (St. Roches College) 10 கணினிகளை நன்கொடையாக வழங்கியுள்ளது. இந்த நிகழ்வானது, கல்விக்கு ஆதரவளிப்பதற்கும், பல ஆண்டுகளாக தங்களுக்கு ஆதரவளித்த சமூகங்களுக்கு நன்றிக்கடன் செலுத்துவதற்குமான AMW இன் அர்ப்பணிப்பை எடுத்துக் காட்டுகிறது.

Yamaha Outboard Motors நிறுவனத்திற்கு அம்பகந்தவில சமூகத்தினர் மிக முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக உள்ளனர். இந்த முயற்சிக்காக, நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு பாடசாலைகள் தொடர்பில் கவனமாக பரிசீலித்த பின்னர் புனித ரோச்சஸ் கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது. கணினிகளை நன்கொடையாக வழங்குவதற்கு மேலதிகமாக, கல்லூரியின் கணினிக் கூடம் முழுமையாக செயற்படுவதை உறுதி செய்யும் வகையில், அது தொடர்பான பழுதுபார்ப்புகளை முன்னெடுத்து, அனைத்து மின்சார தொடர்புகள் மற்றும் இணைப்புகளையும் AMW நிறுவனம் சீர் செய்ய நடவடிக்கை எடுத்திருந்தது. பாடசாலையின் தேவைகளுக்கு ஏற்றவாறு அவசியமான அனைத்து அத்தியாவசிய மென்பொருட்களும் கணினிகளில் முழுமையாக இணைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

இதன் மூலம், அவை மாணவர்களின் கல்வி, ஆராய்ச்சி, கற்றலுக்கு அவசியமான விடயங்களை அணுகுவதற்கான திறனை கொண்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளன.

AMW இன் முக்கிய உறுப்பினர்களான Yamaha Sri Lanka தலைவர் Shusaku Sato, Yamaha OBM விற்பனைத் தலைவர் ஜேசுமணி தமேல், தகவல் தொழில்நுட்ப பொது முகாமையாளர் லிலான் திஸாநாயக்க, Associated Motorways (Pvt) மனித வளத் தலைவர் ஹர்ஷனி ரணசிங்க உள்ளிட்ட AMW இன் முக்கிய பிரமுகர்கள், புனித ரோச்சஸ் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள் கலந்துகொண்ட இவ்விழாவில் பாடசாலைக்கு கணினிகள் கையளிக்கப்பட்டன.

உள்நாட்டு வாகனத் துறையில் 75 ஆண்டுகளுக்கும் மேலான சிறந்த வரலாற்றைக் கொண்டுள்ள AMW, சமூகங்களுக்கு ஆதரவளிப்பதற்கும் கல்வி வளர்ச்சியை மேம்படுத்துவதற்குமான அதன் உறுதிப்பாட்டை மீண்டுமொரு முறை உறுதிப்படுத்தியுள்ளது.

# இலங்கை இளையோரின் ஆதிக்கத்துடன் இளையோர் டெஸ்ட் சமநிலையில் முடிவு



இலங்கை மற்றும் இங்கிலாந்து 19 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான முதலாவது இளையோர் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வி இன்றி சமநிலையில் முடிந்துள்ளது. இந்நிலையில் தொடரை தீர்மானிக்கும் இரண்டாவது மற்றும் கடைசி இளையோர் டெஸ்ட் போட்டி எதிர்வரும் ஜூலை 16 ஆம் திகதி செல்டன்ஹாமில் நடைபெறவுள்ளது.

இதில் கொட்டாஞ்சேனை புனித பெனடிக்ட் கல்லூரியைச் சேர்ந்த விக்கெட் காப்பாளர் ஷாருஜன் ஷன்முகநாதன் துடுப்பாட்டத்தில் சோபித்ததோடு பந்து வீச்சில் பிரவீன் மனீஷ சிறப்பாக செயற்பட்டார்.

இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இலங்கை இளையோர் அணி ஒருநாள் தொடரை இழந்த நிலையிலேயே நான்கு நாட்கள் கொண்ட இளையோர் டெஸ்ட் போட்டியில் களமிறங்கியது. கடந்த திங்கட்கிழமை வோம்லியில் ஆரம்பமான இந்தப் போட்டியில் இரண்டாம் நாள் ஆட்டம் மழையால் முழுமையாக கைவிடப்பட்டது. இதில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இலங்கை இளையோர் அணி சார்பில் மத்திய வரிசையில் அணித்தலைவர் தினுர களுபஹன சதம் (104) பெற்றார். அதே போன்று நெதன் கெல்தரே அரைச் சதம் ஒன்றை பெற்றார்.

இதன்மூலம் இலங்கை இளையோர் அணி முதல் இன்னிங்ஸில் 85.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 324 ஓட்டங்களை பெற்றது.

தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து இளையோர் அணிக்கு நெருக்கடி கொடுக்க இளம் பந்து வீச்சாளர்களால் முடிந்தது. இதனால் அந்த அணி 72.3 ஓவர்களில் 247 ஓட்டங்களுக்கு சுருண்டது. குறிப்பாக சுழற்பந்து வீச்சாளர் மனீஷ 21.3 ஓவர்களில் 56 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 6 விக்கெட்டுகளை பதம்பார்த்தார். விஹாஸ் தெளமிக்க 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

முதல் இன்னிங்ஸில் 77 ஓட்டங்களால் முன்னிலை பெற்று தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை இளையோர்கள் சிறப்பாக துடுப்பெடுத்தாடினர். குறிப்பாக முதல் வரிசையில் வந்த ஷாருஜன் 151 பந்துகளில் 10 பௌண்டரிகளுடன் 73 ஓட்டங்களைப் பெற்றார்.

நேற்று முன்தினம் (11) கடைசி நாள் ஆட்டநேர முடிவின்போது இலங்கை இளையோர் அணி 56 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 192 ஓட்டங்களை பெற்றிருந்தது. இதன்போது இலங்கை இளையோர் அணி இங்கிலாந்தை விடவும் 269 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ரிட்ஸ்பரி அஞ்சலோட்ட களியாட்டம்: மாரிஸ் ஸ்டெல்லா, லைசியம் வெற்றி







இலங்கையின் வளர்ந்து வரும் விளையாட்டு வீரர்களின் திறமைகளை வெளிப்படுத்துவதற்காக மூன்று நாள் போட்டியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த, ரிட்ஸ்பரி அஞ்சலோட்ட களியாட்டம் அண்மையில் பதுளை, வின்சன்ட் டயஸ் மைதானத்தில் நிறைவடைந்தது.

கல்வி அமைச்சு மற்றும் இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுநர் சம்மேளனம் மற்றும் நிகழ்வின் ஏக அனுசரணையாளராக ரிட்ஸ்பரி ஆகியன இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

நாடு முழுவதிலும் இருந்து 220க்கும் அதிகமான பாடசாலைகளின் 4,000க்கும் அதிகமான இளம் மெய்வல்லுநர்கள் இந்தப் போட்டியில் பங்கேற்றிருந்தனர்.

நீர்கொழும்பு மாரிஸ் ஸ்டெல்லா கல்லூரி ஆண்கள் பிரிவு மொத்தம் 87 புள்ளிகளுடன் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. வென்னப்புவ ஜோசப் வாஸ் கல்லூரி இரண்டாமிடத்தையும், கொழும்பு சென் பெனடிக்ட் கல்லூரி மூன்றாமிடத்தையும் சுவீகரித்தன. பெண்கள் பிரிவில், வத்தளை லைசியம் சர்வதேச பாடசாலை அணி சம்பியன் பட்டம் வென்றதுடன், 120 புள்ளிகளை பதிவு செய்திருந்தது. வலல ஏ ரத்நாயக்க சி சி, மெனிக்ஹின்ன இரண்டாமிடத்தையும், கம்பஹா புனித சிலுவைக் கல்லூரி மூன்றாமிடத்தையும் வென்றன.

வெற்றியாளர்களை தெரிவு செய்வதற்கு மேலதிகமாக ரிட்ஸ்பரி அஞ்சலோட்ட களியாட்டம் 2024 பல்வேறு நோக்கங்களை நிறைவேற்றுவதாக அமைந்திருந்தது. நாட்டின் பல்வேறு பாகங்களைச் சேர்ந்த இளம் மெய்வல்லுநர்களில் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக் கொண்டுவருவதற்கான களமாக அமைந்திருந்தது.

தேசத்தின் விளையாட்டு எதிர்காலத்தை கட்டியெழுப்புவது மாத்திரமன்றி, ஆரோக்கியமான போட்டித்திறன் மற்றும் விளையாட்டுப் பண்புகளையும் பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஊக்குவிப்பதாக அமைந்திருந்தது.

## சர்வதேச செய்திகள்

# இஸ்ரேலியப் படை வாபஸ் பெற்ற காசாவின் ஷுஜையா தரைமட்டம்: 60 சடலங்கள் மீட்பு



காசா நகரின் ஷுஜையா பகுதியில் இஸ்ரேலியப் படை இராணுவ நடவடிக்கையை நிறைவு செய்த நிலையில் அங்கு இடிபாடுகளில் இருந்து சுமார் 60 சடலங்கள் மீட்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலின் வான் தாக்குதல்கள் மற்றும் தரைவழி நடவடிக்கைகள் காரணமாக ஷுஜையாவில் உள்ள 85 வீதத்துக்கும் அதிகமான குடியிருப்புக் கட்டடங்கள் தரைமட்டமாக்கப்பட்டு மனிதர் வாழ தகுதியற்ற இடமாக மாற்றப்பட்டிருப்பதாக உள்ளூர் தரப்புகள் தெரிவித்துள்ளன. இங்கு 60,000க்கும் அதிகமானோருக்கு சிகிச்சை அளித்து வந்த மருத்துவமனை ஒன்றும் அழிக்கப்பட்டுள்ளது.

இங்கு இஸ்ரேலிய படை வெளியேறும் மக்கள் மீது தாக்குதல்களை நடத்தியது பற்றி பார்த்தவர்கள் விபரித்திருந்தனர். இந்நிலையில் அந்தப் படை வாபஸ் பெற்ற பின்னர் பேரழிவுகள் ஏற்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

இரண்டு வார படை நடவடிக்கைக்குப் பின்னரே இஸ்ரேலியப் படை ஷுஜையாவில் இருந்து கடந்த புதன்கிழமை வாபஸ் பெற்றது. 'இங்கு இடிபாடுகளின் கீழ் மேலும் பல டஜன் உடல்கள் சிக்கி உள்ளன' என்று காசா சிவில் பாதுகாப்பு நிறுவனத்தின் பேச்சாளர் மஹ்மூத் பசால் செய்தியாளர் சந்திப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

'தெருக்களில் உடல்கள் சிதறிக் கிடக்கின்றன, துண்டாக்கப்பட்ட உடல்கள் உள்ளன. முழு குடும்பங்களின் உடல்கள் உள்ளன, ஒரு முழு குடும்பத்தின் உடல்கள் முழுவதுமாக எரிக்கப்பட்ட வீட்டுக்குள் உள்ளன' என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஷுஜையா குடியிருப்பாளர் ஒருவரான முஹமது நயிரி, தாமும் ஏனையவர்களும் அங்கு திரும்பியபோது விபரிக்க முடியாத அழிவுகளை கண்டதாகவும் அனைத்து வீடுகளும் அழிக்கப்பட்டிருப்பதாகவும் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

ஷுஜையாவில் இருந்து இஸ்ரேலியப் படை வெளியேறியபோதும் காசா நகரில் இஸ்ரேலில் குண்டு வீச்சுகள் தொடர்வதோடு பலஸ்தீன போராளிகளுடனான மோதலும் நீடித்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

டாங்கிகள் மற்றும் துருப்புகள் நகரின் மற்ற பகுதிகளை நோக்கி நகர்ந்து வருவதாக பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கான முயற்சிகள் கட்டார் மற்றும் எகிப்து மத்தியஸ்தர்களால் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் சூழலில் இஸ்ரேலின் உக்கிர தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.



இஸ்ரேலின் தாக்குதல்களில் மேலும் 32 பேர் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்தது. ஒன்பது மாதங்களுக்கு மேலாக நீடிக்கும் இந்தப் போரில் காசாவின் வடக்கு மற்றும் தெற்கில் மோதல்கள் உக்கிரம் அடைந்துள்ளன.

காசா சுகாதார அமைச்சு வெளியிட்ட சுருக்கமான அறிவிப்பில், 'இஸ்ரேலிய படைகளினால் தொடர்ந்து படுகொலைகள் இடம்பெறுவதன் காரணமாக சிறுவர்கள் மற்றும் பெண்களை பெரும்பான்மையாகக் கொண்ட உயிர்த்தியாகம் செய்த 32 பேரின் உடல்களும் மருத்துவமனைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டன' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. காசாவின் பல இடங்களிலும் 70 க்கும் அதிகமான வான் தாக்குதல்கள் இடம்பெற்றதாக ஹமாஸ் ஊடக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. வடக்கில் காசா நகர், மத்திய காசாவில் நுஸைரத் அகதி முகாம் மற்றும் தெற்கில் கான் யூனிஸ் மற்றும் ரபா நகரங்களில் கடும் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன.

எகிப்து எல்லையை ஒட்டிய ரபாவில் தொடர்ந்து படை நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது. காசாவில் கடந்த ஒன்பது மாதங்களுக்கு மேலாக இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்களில் 38,400 பேர் வரை கொல்லப்பட்டிருப்பதோடு 88,300க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

தவிர, கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி போர் வெடித்தது தொடக்கம் சுமார் 6,400 பலஸ்தீனர்கள் காணாமல்போயிருப்பதாக சர்வதேச செம்பிறை சங்கம் தெரிவித்துள்ளது. இவர்கள் இன்னும் கண்டுபிடிக்கப் படவில்லை என்றும் அந்த சங்கம் வெளியிட்டிருக்கும் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் பலரும் கட்டட இடிபாடுகளில் சிக்கி, அடையாளம் காணப்படாது அடக்கம் செய்யப்பட்டு அல்லது இஸ்ரேலிய தடுப்புக்காவலில் இருக்கலாம் என்று பலரும் நம்புகின்றனர்.

இதேவேளை, போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்று எட்டப்பட்டால் எகிப்து மற்றும் காசா எல்லையில் இருந்து இஸ்ரேலிய படை வாபஸ் பெறும் வகையில் அங்கு மின்னணு கண்காணிப்பு முறை ஒன்றை நிறுவுவதற்கு இஸ்ரேல் மற்றும் எகிப்து போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையாளர்கள் பேசி இருப்பதாக தெரியவருகிறது.

இந்த எல்லைப் பகுதியில் இஸ்ரேலியப் படை நிலைகொண்டிருப்பதை ஹமாஸ் மற்றும் எகிப்து எதிர்த்து வரும் நிலையில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதில் இந்த விவகாரமும் தொடர்ந்து முட்டுக்கட்டையாக இருந்து வருகிறது.

இங்கிருந்து துருப்புகள் வெளியேறினால் இந்த எல்லைப் பகுதியை எகிப்தில் இருந்து ஆயுதங்களை கடத்த ஹமாஸ் பயன்படுத்தக் கூடும் என்று இஸ்ரேல் குற்றம்சாட்டுகிறது. இந்நிலையில் கண்காணிப்பு முறை ஒன்றுக்கு இணக்கம் எட்டப்பட்டால் அது போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றை எட்டுவதை சுமூகமாக்கக் கூடும் என்றபோதும் இன்னும் பல முட்டுக்கட்டைகள் இருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வியாழனன்று இராணுவ நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, 'காசா–எகிப்து எல்லையில் இஸ்ரேலின் கட்டுப்பாட்டை பாதுகாக்கும் ஒப்பந்தத்திற்கு மட்டுமே உடன்பட முடியும்' என்று குறிப்பிட்டிருந்தார்.

போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றுக்கான பேச்சுவார்த்தைகள் அமெரிக்காவின் ஆதரவுடன் கட்டார் மற்றும் எகிப்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் 10 மாதங்களை எட்டியிருக்கும் காசா போரை நிறுத்துவது மற்றும் காசாவில் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் இஸ்ரேலிய பணயக் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே மறைமுக பேச்சுகள் இடம்பெறுகின்றன.

# இரு பஸ்கள் ஆற்றில் மூழ்கி 60 பேர் மாயம்



நேபாளத்தில் கன மழையை அடுத்து ஏற்பட்ட நிலச்சரிவில் இரு பஸ் வண்டிகள் ஆற்றில் அடித்துச்செல்லப்பட்ட நிலையில் 60க்கும் அதிகமானோர் காணாமல்போயுள்ளனர்.

சிட்வான் மாவட்டத்தில் நேற்று (12) சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் காணாமல் போனவர்களைத் தேடும் பணிகள் மும்முரமாக மேற்கொள்ளப்படுவதாக மாவட்ட அதிகாரிகள் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தனர்.

அந்த 2 பஸ்களும் குறைந்தது 66 பயணிகளை ஏற்றியிருந்தன. சம்பவத்தில் இருந்து தப்பிய 3 பேர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வழியில் மேலும் சிலர் பஸ்களில் ஏறியிருக்கலாம் என்பதால் எத்தனை பேர் காணாமல் போயினர் என்பது தெரியவில்லை என்று அதிகாரிகள் கூறினர். ஆற்றில் இருந்து இன்னும் யாரும் மீட்கப்படவில்லை. சம்பவம் குறித்து நேபாளப் பிரதமர் புஷ்ப கமல் டஹால் வருத்தம் தெரிவித்தார்.

# மீண்டும் குளறிய பைடன்

செய்தியாளர் கூட்டத்தில் கலந்துகொண்ட அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ், முன்னாள் ஜனாதிபதி டொனல்ட் டிரம்ப் ஆகியோரின் பெயர்களை மாற்றி மாற்றிக் கூறி குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளார்.

துணை ஜனாதிபதி ஹாரிஸ் மீது தமக்கு இருக்கும் நம்பிக்கை குறித்து ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் கேட்ட கேள்விக்கு பைடன் பதில் அளித்தார்.

'ஜனாதிபதியாகும் தகுதி இல்லை என்றால் துணை ஜனாதிபதி டிரம்ப்பை நான் துணை ஜனாதிபதியாக தெரிவு செய்திருக்க மாட்டேன்' என்றார் அவர்.



உக்ரைனிய ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கியை ஜனாதிபதி புட்டின் என்று தவறாய் அடையாளப்படுத்திய சில மணி நேரத்துக்குப் பின்னர் இந்தப் புதிய குழப்பம் நடந்துள்ளது.

வொஷிங்டனில் நேட்டோ உச்சநிலை மாநாட்டில் பேசிய பைடன் 'இப்போது நான் உக்ரைனிய ஜனாதிபதி புட்டினிடம் ஒப்படைக்கிறேன்' என்றார். அது மாநாட்டில் இருந்தவர்களிடையே அசௌகரியத்தை ஏற்படுத்தியது.

எனினும் அடுத்த வரியில் பைடன் தமது வார்த்தைகளைத் திருத்திக்கொண்டார்.

பைடனின் இந்தச் செயல் தேர்தலில் அவர் போட்டியிடும் ஆற்றல் குறித்து அவரது நன்கொடையாளர்கள், ஆதாரவாளர்கள் இடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 2 வாரத்துக்கு முன்னர் டொனல்ட் டிரம்ப்புக்கு எதிராகக் களமிறங்கிய நேரடி விவாதத்திலும் 81 வயது பைடன் தடுமாறினார். இதனால் அவரது தேர்தல் பிரசாரம் சற்று ஆட்டம் கண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

# சிறுமியை மீட்கக் கோரி ஜெனீவாவில் ஆர்ப்பாட்டம்



பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் காணாமல் போயுள்ள சிறுமி பிரியா குமாரியை பாதுகாப்பாக மீட்டுத் தருமாறு கோரி ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டமொன்று நடாத்தப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 56ஆவது அமர்வு நடைபெறும் சமயத்தில் சிந்து மன்றம் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்து நடாத்தியது.

இவ்வார்ப்பாட்டம் குறித்து மன்றத்தின் பணிப்பாளர் முனவர் சூபி லகாரி குறிப்பிடுகையில், சிந்து பிரதேச நிலபிரபுத்துவ தரப்பினரால் இச்சிறுமி கடத்தப்பட்டிருப்பதாக பரவலாக தெரிவிக்கப்படுகிறது. சட்டம் ஒழுங்கை நடைமுறைப்படுத்தும் தரப்பினருக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டு மூன்றாண்டுகளாகியும் சிறுமி கிடைக்கப்பெறாத நிலை நீடிக்கிறது.

அதனால் ஏற்கனவே லண்டனிலும், டொரோண்டோவிலும் ஆர்ப்பாட்டங்களை நடாத்தியுள்ளோம். அடுத்து அமெரிக்காவில் நடாத்த எதிர்பார்த்துள்ளோம். எமது சிறுமியை மீட்டெடுப்பதே எமது நோக்கம்.

அதற்காகவே இதனை செய்கிறோம் என்றுள்ளார்.

ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு மகஜரொன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூலை மாதம் 13ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.